

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை நூல்

அன்பளிப்பு
COLOMBO TAMIL SANGAM SOCIETY LTD.
17.6.98

வருக பொற்காலம்

(உலகத் தமிழ்க் கவிதைத் தேர்வுத் தொகுப்பு நூல்)

1994

கொழும்புத் தமிழ்ச் சங்க வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புரிமை பெற்றது

முதற்பதிப்பு: 1995 பெப்ரவரி

நூற்பெயர் : 'வருக பொற்காலம்'
(உலகக் கவிதைத் தேர்விற் பரிசில், திறமைச்சான்றிதழ் பெற்ற கவிதைகள்)

பிரதிகள் : 300

நூல் வெளியீடு : 12-03-1995

வெளியீடு : கொழும்புத் தமிழ்ச் சங்கம்
7, 57ம ஒழுங்கை, கொழும்பு 6, இலங்கை.

அச்சகம் : வத்தளை அச்சகம்
17/10, நீர்கொழும்பு வீதி, வத்தளை.

COPY RIGHT
First Edition : 1995 February

Name of the Book : VARUKA POTKALAM
(Selected Worlds Poem)

No of Copies : 300

Publication : Colombo Tamil Sangam Socuity Ltd.
7, 57th Lane, Colombo 6, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

1. பதிப்புரை

2. வாழ்த்துரை

3. உலகத் தமிழ்க் கவிதைத் தேர்வில்
   1. முதன்மைப் பரிசில்கள் பெற்ற கவிஞர்கள்
   2. திறமைச் சான்றிதழ் பெற்ற கவிஞர்கள்
   3. பாராட்டுச் சான்றிதழ் பெற்ற கவிஞர்கள்
   4. முதன்மைப் பரிசில் நிதிகளும், அவற்றை வழங்கியவர்களும்

4. பரிசில் பெற்ற கவிதைகள்
   1. முதற் பரிசில் பெற்ற கவிதை
   2. இரண்டாம் பரிசில் பெற்ற கவிதை
   3. மூன்றாம் பரிசில் பெற்ற கவிதை

5. திறமைச் சான்றிதழ் பெற்ற கவிதைகள்
   1. புலவர் மெய்யாண்டவன், காரைக்குடி, தமிழ்நாடு
   2. கவிஞர் ம. விக்ரர், யாழ்ப்பாணம்
   3. கவிஞர் ஏ. ஸீ. இஸ்மெயில்லெப்பை மட்டக்களப்பு
   4. கவிஞர் தமிழப்பன், சென்னை
   5. புலவர் க. த. ஞானப்பிரகாசம், யாழ்ப்பாணம்

6. பாராட்டுச் சான்றிதழ் பெற்ற கவிதைகள்
   1. கவிஞர் வி. இக்குவனம், சிங்கப்பூர்
   2. சிவா சின்னத்தம்பி, கனடா

7. பரிசில்கள், திறமைச்சான்றிதழ், பாராட்டுச்சான்றிதழ் பெற்றகவிஞர்கள் பற்றிய குறிப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புரை

தமிழ் உலகத் தொன்மொழி. தமிழர் வரலாற்றுத் தொடக்க காலத்திலே வளமாக வாழ்ந்தனர். முதற் தமிழ்ச் சங்கம் உலகிற் தோன்றிய முதல் அமைப்பு. தமிழ்ப் பெரு நிலப்பரப்புப் பலமுறை கடல் கொண்டதனால் தமிழும் தமிழரும் உலகில் முதன்மை பெறவில்லை. பலவகைக் காரணங்களால் தமிழ் மக்கள் இக்காலத்தில் உலகின் பல நாடுகளிற் பரந்து வாழ்கின்றனர். பலவகைப் பாதிப்புகளின் மத்தியில் தமிழைப் பாதுகாத்து வருகின்றனர். உலக நாடு களில் பலவற்றில் போர்களும், அமைதியற்ற நிலையும் உள்ளன. தமிழ் நிலப்பரப்புகளில் ஒன்றிய நிலை இல்லை.

உலகத் தமிழ்த் தொடர்புக்கும் உலகத்தமிழ் வளர்ச்சிக் கும், உலகின் அமைதிக்கும் ஆகக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் கடந்த ஆண்டு உலகத் தமிழ்க் கவிதைத் தேர்வை ஒழுங்கு செய்தது. கொழும்புத் தமிழ்ச் சங்கம், பண்டைத் தமிழ்ச் சங்க மரபையும் பண்பாட்டையும் வளர்க்கும் அமைப்புகளுள் ஒன்றாக உள்ளது. இத்தமிழ்க் கவிதைத் தேர்வுக்கு உலகின் பல நாடுகளில் உள்ள 101 கவிஞர்கள் பங்கு பற்றினர். கவிஞர்கள் சிலர் இலங்கைத் தமிழர் நிலை யையும், சிலர் உலகத் தமிழர் நிலை, தமிழ்ப் பண்பாட்டு நிலை, தமிழ் மொழிநிலை ஆகியவற்றையும், சிலர் உலக நிலையையும் முதன்மையாக வைத்துக் கவிதைகள் யாத்துனர்.

நடுவர்கள் தீர்ப்பின்படி முதன்மைப் பரிசில்கள் மூன்றும் தமிழகக் கவிஞர்களுக்குக் கிடைத்தன. அடுத்த ஐந்து கவிதைகள் திறமைச் சான்றிதழ்களும், அடுத்த இரு கவிதை கள் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்குதற்கு உரியன ஆயின.

இச்சங்க இலக்கிய குழுவினதும், ஆட்சிக்குழுவினதும் தீர்மானங்களின் படி கொழும்பு மாநகரில் நிகழும் சிறப்பு விழாவில் இப்பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப் பெற்றன. முதன்மூவருக்கும் பயணச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கற்கும் ஒழுங்கு செய்யப் பெற்றது. இக் கவிதைத் தேர்வு உலகச் சிறப்பு நிகழ்வு ஆதலின் தெரிவு பெற்ற கவிதைகள் நூலாக இச்சிறப்பு விழாவில் வெளிவருவதற்கு ஒழுங்குகள் செய்யப்பெற்றன.

தமிழ் மொழியும் தமிழ் கூறும் நல்லுலகும் உலகில் உயர்வும், வளமும் பெறவேண்டும் என்பதையும், உலக நாடுகள் வளம் பெற வேண்டும் என்பதையும் அனைவரும் விழைவர். இச்சிந்தனையை வளர்த்துச் செயலாக்க வைத்தல் இத்தேர்வினதும் இந்நூலினதும் குறிக்கோள் ஆகும் சங்ககாலம் தமிழின் பொற்காலம் அதிலும் மேலான பொற்காலத்தை இக்காலத்தும் வருங்காலத்தும் காணபோம். இத்தேர்வுப் பரிசில்களுக்கு நிதி உதவிய பெரியார்களும், இந்நூல் வெளிவர உதவிய பெரியார்களுக்கும் இவ்விழா சிறப்புற உதவிய ஆர்வலர்களுக்கும், இத்தேர்வில் பங்குபற்றிய அனைத்துக் கவிஞர்களுக்கும் இந்நூலைச் சிறப்பாக அச்சிட்டு உதவிய அச்சகத்தினருக்கும் இச்சங்கத்தின் மேலான பாராட்டுகளும் நன்றியறிதலும் உரியன.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'
(சங்ககாலப் புலவன் கணியன்பூங்குன்றன்)

'இருந்தமிழே உன்னால் இருந்தேன் வானோர்;
விருந் தமிழ்தம் எனினும் வேண்டேன்' (தமிழ் விடுதூது)

'என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாத் தமிழ்செய்யும் ஆறே (திருமூலர்)

'சூழ்கவி நீங்கத் தமிழ்மொழி ஓங்கச்
சுடர்க வையக மே' (மகாகவி பாரதி)

தமிழவேள் க இ. க. கந்தசுவாமி
பொதுச் செயலாளர்
கொழும்புத் தமிழ்ச் சங்கம்

சங்க அகம்,
7, 57ம் ஒழுங்கை,
கொழும்பு 6.
01-06-1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துரை

"தமிழாய்த் தவழ்க கவிதைமலர்"

செ. குணரத்தினம்
தலைவர்
கொழும்புத் தமிழ்ச் சங்கம்

உலகில் ஓவ்வார் கோடியிலும்
ஓங்கு புகழ்சேர் தமிழ்மக்கள்
பலராய்க் காடசி தந்தாலும்
பாகு தமிழால் ஒன்றானார்
நிலவு உண்மை இவையுரைக்க
நீள்பொற் கவிதை புனைமினெனக்
குலவு கொழும்புத் தமிழ்ச்சங்கம்
கூவி யிவரை அழைத்ததுவால்

பூக்கும் 'வருக பொற்கால'மெனப்
புதுமைத் தலைப்பைக் கொண்டதுவாய்ப்
பாக்கள் புனைந்து அனுப்பிவிடின்
பரிசும் சிறப்பும் உண்டென்று
ஊக்கம் அதுவாய் அழைத்திட்ட
உரவோன் செம்மல் 'தமிழவேள்'
ஆக்கம் கவிதை பலவாக
அனுப்பி வைத்தார் தமிழ்ப்புலவோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம் பலவும் கண்டதுவும்
தரணி போற்ற வாழ்ந்ததுவும்
மங்காப் புகழோர் தமிழ்மன்னர்
மறையாக் கீர்த்தி கண்டதுவும்
கங்கை கொண்டான் சோழனென்றும்
கடாரம் வென்றான் இவனென்றும்
வங்கக் குமரி ஆர்த்திசைக்க
வளர்பொன் இசையமிக்க எதிரொலிக்கும் 3

பரணி பாடும் தமிழ்மறவர்
பயிலும் தமிழ்நாட்டு உயர்புலவோர்
தரணி புகழும் மலாய்நாட்டோர்
சாகரம் சூழ் எழில்ஈழம்
வரமிக்கு எழுந்தது கவிதைவளம்
வார்த்தை கங்கை யமுனையென
சிரமுற் றெழுந்த செழுமையிலே
சிந்தை கொண்டார் தமிழ்ப்புலவோர் 4

நெஞ்சம் நிறைந்த கவிவாணர்
நினைவு பலிக்கும் எனஉரைப்பர்
செஞ்சொற் தமிழ்த்தாய் உலகோங்கிச்
சிறக்க எட்டாம் மாநாடு
தஞ்சை நகரில் எழுகிறதால்
தமிழே ஒலிக்கும் உலகெங்கும்
கஞ்ச மலராள் யாழ்நங்கை
காப்பாள் செம்மை இவைவாழ்க

இந்தக் கவிதைப் பிரவாகம்
இனிதாய்க் கொண்ட கவிதைகளைச்
சந்தம் பொருள் அழகுணர்வு
சார்ந்து சிறந்த சுவைபோற்றிச்
சிந்தை நிறைந்த நடுவர்குழாம்
தேர்ந்து கொய்த மணிமலரால்
தந்தோம் உங்கள் சரங்களிலே
தமிழாய்த் தவழ்க இக்கவிதைமலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தமிழ் கவிதைத் தேர்வு 1993

கொழும்பு தமிழ்ச்சங்கம் 1993ஆம் ஆண்டு 'வருக பொற்காலம்' என்னும் பொருளில் ஒழுங்கு செய்த உலகக் கவிதைத் தேர்வுப் பெறுபேறுகள்.

1. முதன்மைப் பரிசில்கள்

1. முதற் பரிசில் :-
புலவர் சோம சிவப்பிரகாசம்,
கீழ்ச்சிலல்பட்டி, பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.

2. இரண்டாம் பரிசில்:-
புலவர் கபிலவாணன்,
வண்ணாரப்பேட்டை, சென்னை.

3. மூன்றாம் பரிசில்:-
கவிஞர் முருகதாசன்,
பிள்ளையார் கோவில் தெரு, அங்காளம்மன் நகர்,
பாண்டிச்சேரி.

2. திறமைச்சான்றிதழ் பெறுபவர்கள்

1. புலவர் மெய்யாண்டவன்,
அரசு உயர்நிலைப்பள்ளி, அரியக்குடி, காரைக்குடி.

2. கவிஞர் ம. விக்ரர்,
வேம்படி, யாழ்ப்பாணம்.

3. கவிஞர் ஏ. ஸீ. இஸ்மெயில் லெப்பை,
3ஆம் ஒழுங்கை, 1ஆம் குறுக்குத்தெரு, சம்மாந்துறை 3.

4. கவிஞர் தமிழப்பன்
மார்க்கொலனி, அண்ணாநகர் மேற்கு, சென்னை.

5. புலவர் க. த. ஞானப்பிரகாசம்,
யூனியன் வியூ, கொடிகாமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பாராட்டுச் சான்றிதழ் பெறுபவர்கள்

1. வி. இக்குவனம்
கில்குரொஸட் வீதி, சிங்கப்பூர்.

2. சிவா சின்னத்தம்பி,
1194, வெஸ்ராடம் வீதி, மிசிசூக, ஒன்றாரியோ, கனடா

4. முதன்மைப்பரிசில் நிதித்தொகைகளும் இவைகளை அன்பளிப்பாக வழங்கியவர்களும்:-

முதற்பரிசில் - 5000 ரூபா
கொழும்பு எக்ஸ்பிறஸ் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்

இரண்டாம் பரிசில் - 3000 ரூபா
திரு. சி சின்னத்துரை ஜே. பீ. அவர்கள்
உரிமையாளர், கல்கி நிறுவனம், கொழும்பு

மூன்றாம் பரிசில் - 2000 ரூபா
புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை நினைவுப் பரிசில்

7, 57ம் ஒழுங்கை
கொழும்பு 6.
இலங்கை

தமிழவேள் க. இ. க. கந்தசாமி
பொதுச் செயலாளர்
கொழும்புத் தமிழ்ச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகக் கவிதைத் தேர்வு

"வருக பொற்காலம்"

1

எண்சீர் ஆசிரிய விருத்தம்

இரண்டிரண்டாய்ப் பாரதியார் தந்த வெல்லாம் 1
எவருமே சொல்லாத தத்து வங்கள்
இரண்டினிலே ஒன்றுமட்டும் வளர்ந்தால் கண்கள்
இரண்டினிலே ஒன்று போன கதையாய்ப் போகும்!
புரண்டிங்கே இன்பவெள்ளம் பாய வேண்டின்,
புத்துலகை நாளைக்கே சமைக்க வேண்டின்,
அரண்டுள்ள உலகமக்கள் நிலைத்து வாழ
அழகான இந்தநெறி தழைக்க வேண்டும்.

காவியங்கள் செய்வோமே அறிவு! நல்ல 2
காடுகளை வளர்ப்போமே உழைப்பு! போற்றும்
பாவிமகன் வேண்டுமென ஆசைப் பட்டான்.
பலமுடைய சமுதாயச் சிந்த னைக்கே,
கூவியிதைக் குயிலாக இசைத்தான்! நாமோ
கோட்டானின் சத்தமெனப் பொத்திக் கொண்டோம்,
மேவியிவை வளர்ந்து விட்டால், உலக மக்கள்
மேலோங்கி வாழ்வாரே ஐயம் இல்லை.

கலையாக உலகத்தில் வளர்ந்தால் தீமை. 3
கலையென்ப தில்லாமல் எங்கும் கொல்லர்
உலையாக இருந்தாலும் தீமை யேதான்!
உருப்படியாய்ப் பாரதிதாசன் சிந்தித் தானே.
நிலையுயர வழிஎன்ன என்று கண்டான்
நிகரில்லாச் சித்தாந்தம் தந்தான்! இந்தத்
தலைமுறையில் நாம்செய்யத் தவறி விட்டால்
தறுதலைகள் எனப்பின்னோர் திட்டித் தீர்ப்பார்.

'காவியம் செய்வோம் நல்லகாடு வளர்ப்போம்'
'ஆயுதம் செய்வோம் நல்ல காரிதம் செய்வோம்'
'மந்திரம் கற்போம் வினைத்தந்திரம் கற்போம்'
—பாரதியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டாளி சீத்தலையின் சாத்தன், அன்று 4
பாட்டாளி எனலாகி வணிகம் செய்தான்.
ஆட்சியுடன் போர்செய்த செழியன், பாடும்
அருங்கவிஞன் எனவாகிச் சிறந்தி ருந்தான்
வாட்டமின்றி அக்காலம் இருந்த தென்றால்
வாழ்ந்தவர்கள் இருவிதத்தும் சிறந்தி ருந்தார்
கூட்டாட்சி நடந்ததனால், ஏற்றத் தாழ்வைக்
குழிபுதைக்க மண்ணகத்தில் சொர்க்கம் கண்டார்.

ஆண்மையென்றும் பெண்மையென்றும் இரண்டு சக்தி, 5
அம்மையப்பன் தத்துவமும் இதுவே ஆகும்
மாண்புடனே இவ்வுலகம் சிறக்க வேண்டின்,
மாபெரிய இருசக்தித் துணையே தேவை,
வீண்பெருமை பேசாத அறிவும், நெற்றி
வியர்வையைச் சிந்துகிற உழைப்பும் பெற்றால்,
காண்பவர்கள் மகிழ்வாரே, உலகத் தாயோ
கவலையின்றி மகிழ்வாலே துள்ளு வாளோ!

முன்புவந்த வர்க்கப்போர் நிலைமை வேறு 6
முதலாளி அடிமையென்று நிலத்தை வைத்துப்
பன்னாட்டார் போரிட்டார்! செல்வம் என்னும்
பக்கபலம் கொண்டவர்கள் சண்டையிட்டார்.
இந்நாளில் இவ்வகையில் வர்க்கப் போரோ
எழுவதற்கு வழியில்லை! தீர்த்துக் கொண்டோம்.
நன்மையிலா வர்க்கப்போர் வேறு பாதை
நாடுமென்று பாரதியோ அச்சம் கொண்டான்.

சிந்திக்கும் இனமென்று தனியாய் ஒன்றும் 7
தேகத்தால் உழைக்குமினம் என்றும், நின்றால்
சந்ததிகள் பிளவுபட்டுச் சண்டை மூண்டு
தரணியிலே வர்க்கப்போர் வரலாம் என்றான்,
இந்தவிதம் பாழ்பட்டுப் போகா வண்ணம்
இவ்வுலகைப் பாரதிதான் காப்ப தற்காய்த்
தந்தவொரு தத்துவம்தான் இந்தக் கொள்கை
தலைவர்கள் புரிந்துகொண்டால் அதுவே போதும்.

ஊடலது குடும்பத்தில் வந்தால் தானே 8
உளம்இனிக்கும் இல்லறமாய் அதுசி றக்கும்.
கூடலுக்கும் வழிவகுக்கும்! உலகம் தன்னைக்
குடும்பமென நினைப்போமே! சிக்கல் வந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடலினைக் கொள்ளாமல் ஊடல் என்றே,
மறுபெயரை அதற்கிட்டே இன்பம் காண்போம்
பாடமதை உலகத்தோர் பயில்வோம்! ஞாலம்
பண்பாட்டு மையமெனச் சிறக்க வைப்போம்.

விண்வெளியில் பறக்கின்றோம், நிலவினுக்கும் 9
வீறுடனே சென்றுகற்கள் எடுத்து மீண்டோம்.
எண்ணுதற்கே முடியாத அருமை எல்லாம்
எம்உலக இளைஞரினம் ஏற்றுச் செய்வார்.
மண்ணுடனே மண்ணாகிப் போவ தற்கா,
மாடாக இங்குழைத்து வெற்றி கண்டோம்.
வண்ணமிகும் இவ்வுலகம் வாழு தற்கே
வரலாறே படைப்போமே எழுந்து வாரீர்!

பொற்காலம் வருகவெனும் நினைப்பே, நல்ல 10
புகழ்காலம் படைப்பதற்கு வழிவ குக்கும்
கற்பனையைச் செய்யவில்லை! கல்வி பெற்றோம்.
கடுமையாய் உழைக்கிறோம்! எனவே இந்த
நற்காலம் வருதற்குத் தடையே இல்லை
நம்மனைவர் மனமுமே இடங்கொ டுத்தால்
அற்புதமாய் நாளைக்கே காண லாமே
அந்நாளோ வெகுதொலைவில் இல்லைத் தானே!

பதினான்கு சீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்

நிலையுயர்ந்த வித்துவான் நின்றுகுழல் ஊதுங்கால் 1
நெஞ்சுருகிக் கேட்போர் நிலையே,
நிகரிலாப் பேச்சாளர் நிகழ்த்துகிற பொழிவென
நிலைமறந்தால் உயர்ந்த இசையே.
தலைமுறையில் ஆள்வோரோ சராசரி மனிதமனம்
தாம்பெற்றால் பொங்கும் வளமே
தகுதியால் ஆள்வோராய்த் தலைநிமிர்ந்து மக்களெலாம்
தரமுயர்ந்தால் சிறக்கும் உலகே.
கலையுயர வித்துவான் காலையில் சாதகமே
கச்சிதமாய்ப் பண்ணுவாரே
கண்ணெதிரே பொற்காலம் காணவே ஒன்றாகிக்
கடமையைப் புரிவோம் நாமே
தலைமுறையும் இனிவரும் தலைமுறையும் சிறக்கவே
தக்கவழி இதுவே ஆமே
சத்தியத்தின் பாதையெனத் தலைவருடன் மக்களெலாம்
தலைமேலே கொள்ளு வோமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியினை மண்மகளோ அறியவிலை கண்ணகிதான் 2
அடுத்தவூர் பார்த்த தில்லை.
அவள்கணவன் கோவலன் அழைத்ததால் மதுரையை
அடைந்ததாள் பெற்றாள் தொல்லை.
கொடியவன் பொற்கொல்லன் கூற்றாலே நெடுஞ்செழியன்
கொலைகாரன் ஆகி நின்றான்.
கொதித்தெழுந்த கண்ணகியோ குற்றமிலான் என்கணவன்
கொன்றதுவும் சரியா என்றாள்.
முடிமன்னன் அபலையுடன் முன்நின்று வாதிட்டான்
முடிவிலே உயிர்விட் டானே.
முற்போக்கு வந்துவிட்டால் முகம்காட்டிப் பொற்காலம்
முன்வந்து சிரிக்கு மாமே.
முடியாட்சிக் காலத்தில் கொலுவிருக்கும் ஆள்வோர்கள்
கொளவேண்டும் இந்தக் குணமே.
குறைவந்து யார்சொலினும் கூர்ந்ததைக் கேட்டாலோ
குளிருமே மக்கள் மனமே!

தனிமனிதப் பொறாமை தாழ்வென்று வள்ளுவனார் 3
தக்கவாறு சொல்ல, ஆள்வோர்
தன்னாடு போலவே தகுதியிலே பிறநாடு
தரமுயர விடவே மாட்டார்.
மனிதரிலே விலங்குகள் வளமான நாடுகளின்
மாபெரிய தலைவர் ஆனார்.
மறுநாளே முன்னேற வழிதேடும் உலகத்தார்
மனமுடைந்து நைந்து போனார்.
கனிவுதரும் அறிவியலால் கணக்கிலா முன்னேற்றம்
கண்டங்கள் அனைத்தும் சுற்றிக்
கைநொடிக்கும் பொழுதிலே களத்திற்கு வந்திடலாம்
களிப்பூட்டும் பெரிய வெற்றி.
இனியிந்த விதிசெய்வோம் எல்லோரும் குடும்பத்தார்
எனும் உணர்வு கொள்வோம் வாரீர்!
ஏற்றிதனைச் செயற்படுத்தின் எழிலான பொற்காலம்
எழுந்துமுன் நிற்கும் பாரீர்!

உலகத்தின் ஓரத்தில் ஒலிக்கின்ற அழுகுரல் 4
ஒருகாதில் விழுந்த அன்றே,
உடலெலாம் நொந்துமக்கள் ஓடியந்த அழுகையை
உடனேயே தடுத்தல் நன்றே.
கலகந்தான் எங்கெனினும் கவலையை உலகத்தார்
கண்டிப்பாய்க் கொள்ளும் நினைவே,
காரணத்தைக் கண்டுபின்னர் கலவரங்கள் வராவண்ணம்
காப்பாற்ற நிற்கும் துணையே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலகற்ற ஆள்வோர்கள் பாசமின்றிக் குடும்பமெனும்
பண்புமே மிகவும் பட்டுப்
பரவட்டும் வேடிக்கை பார்ப்போமே எனவிருத்தால்
பாழாகும் உலகம் கெட்டு.
நலங்கெட்டே உலகந்தான் நாலாறு பிரிவாக
நாசமுறின் என்ன மிஞ்சும்?
நமக்கென்ன என்போரின் நாடுமே வளமிருந்தும்,
நலிவுற்றே உலகைக் கெஞ்சும்!

பனியினால் வெள்ளத்தால் பாதாள வெடிப்பதனால் 5
பார்மக்கள் அழிதல் தன்னைப்
பாசத்தால் குடும்பமெனும் பற்றதனால் இயற்கையைப்
பணியவைக்க வழியே இல்லை.
அநியாயச் செய்திகள் அறிந்தவுடன் ஓடியே
அரும்உதவி செய்தல் நன்றே.
அனுமுடியா நாட்டாரோ ஆழ்ந்ததம் துக்கத்தை
அறிவித்தால் மகிழ்வார் அன்றோ.
நனிபசியால் பெரும்பிணியால் நலிவுறும் நாட்டுமக்கள்
'நம்மக்கள்' என்று நினைப்போம்
நல்லநாள் வந்துவிட்டால் நாளைக்கே பொற்காலம்
நாம்கூடி மகிழ்ந்து படைப்போம்,
புனிதத்தைச் செய்வதுபோல் புறப்படுவோர் அந்நாட்டின்
பொறுப்பேற்க நினைக்க லாமா?
போர்வேறு நடக்கிறது, புதைகுழி நிறைகிறது,
பொற்காலம் கனவாய்ப் போமே!

துப்பாக்கிக் குண்டுகளோ தொடர்ச்சியாய் மனிதரைத் 6
துளைக்காத நாளே இல்லை.
தூள்தூளாய்க் கட்டடங்கள் தொல்லுலகில் இன்றைக்குச்
சுக்குநூறாய்ப் போதல் தொல்லை.
எப்படியோ வெடிபொருட்கள் ஏராளம் தயாரிப்பர்
இதுதானா நம்பண் பாடு?
இவ்வாறாய் அழியவா எல்லோரும் இங்குழைத்தோம்,
இதுபெரிய வெட்கக் கேடு,
அப்பாவி நம்மக்கள் அன்றாடம் சாகின்றார்
அதைநிறுத்த வழியா இல்லை.
அரிதரிது மானிடராய் அவதரித்தல் அரிதென்றார்
ஆணவத்தார் உணர வில்லை.
இப்படியே போனாலோ இவ்வுலகம் சுடுகாடாய்
இறுதியிலே அழிதல் உண்மை
எழுகின்ற பிரச்சனைக்(கு) ஏற்றவழி வன்முறையே
என்பாரின் கூற்றோ பொய்மை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபதாம் நூற்றாண்டின் இளைஞனின் வெளித்தோற்றம் 7
இன்பமுடன் அழகும் ஊட்டும்
எழிலுடனே நாகரிகம் ஏற்றபெரும் உயர்கல்வி
இவ்வுலகம் எங்கும் காட்டும்
ஒருசிறிய பிரச்சனை உள்நாட்டில் உருவானால்
உடன் ஆயுதத்தைப் பிடிப்பார்
உலகமே எதிர்த்தாலும் ஒருசிறிதும் அஞ்சிடோம்
உறுமியே துடிது டிப்பார்.
வருகின்ற பிரச்சனைக்கு வாதங்கள் செயலாமே
வழிகாணத் தேர்தல் உண்டாம்
வம்படியாய் வன்முறையே வழியென்றால், தேசத்தாய்
வாய்மூடி நொந்து கொள்வாள்
அருமையாய்ப் பெற்றதாய் ஆனந்தக் கண்ணீரால்
அகமகிழச் செய்தால் தானே
அறிவுடனே நாகரிகம் அடைந்ததற்(கு) அடையாளம்
அடிப்படை மறக்க லாமா!

கொள்கையிலே முரண்பாடு குறுக்கிட்டால் உடனேயே 8
குண்டுமழை பொழிவர் அந்தோ!
கொடுமைசெய் வெடிகுண்டால் கூண்டோடு மனிதஇனம்
குழிமூடிப் போவார் வெந்தே.
உள்நாட்டுக் கலகங்கள் ஒருநாளில் முடியவே
உட்கார்ந்து பேசும் குணமே,
ஒற்றுமையை வேற்றுமையில் உளமாரக் கொளச்செயும்
ஒருதொடியில் முடிவு பெறுமே!
வெள்ளம்போல் பெருகிவரும் வேறுவகைத் தீமையால்
விரியுலகம் பாழாய்ப் போமே.
வேதனைக்கு முடிவிலை வேதனைகள் புரிவோரின்
விலாஎலும்(பு) ஒடிப்பார் யாரோ?
உள்ளபடி சிந்தனையை உயிர் மூச்சாய்க் கொண்டாரோ
உருகிநிதம் அழிந்து தேய்வார்
ஒப்பற்ற வழியதனை ஒன்றாகிக் கண்டுவிடின்
உலகத்தார் உயர்ந்து வாழ்வர்.

நேயமிலா மனிதர்கள் நிகழ்த்துகிற கொடுமையை 9
நீட்டினால் இராம காதை.
நெஞ்சமோ வெடிக்கிறது, நினைத்தாலோ துடிக்கிறது,
நேர்மையிலார் செய்யும் வாதை:
பாயதனில் படுப்பவன் பஞ்சணையில் படுக்கவே
பழிபாவம் செய்கிறானே!
படிப்பின்றி, உழைப்பின்றிப் பணம்படைத்தோன் ஆகவே
பாதகமே புரிவார் வீணே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேயமெங்கும் அபின்கஞ்சா தினமுமே கடத்துகிறார்
செல்வரையும் கடத்திச் செல்வார்
சிறைவிடுவிக்கப் பணம்பறிப்பார் தினையளவும் சட்டத்தைச்
சிந்தனையில் இவரோ கொள்ளார்.
பேயவரின் ஆட்டங்கள் பேருலகம் எங்கணுமே
பெருநோயாய்ப் பரவும் நேரம்.
பெரும்கறுப்புப் பணத்தாலே பேரரசு நடத்துகிறார்
பேயொழித்தால் அதுவே வீரம்!

முதலென்றே பொருளுக்கு முன்னோர்கள் பெயர்வைத்தார் 10
முதன்மையை உணர்த்திச் சென்றார்.
முழுவதுமே பொருளென்ற மோகத்தால் பலபேரோ
மூழ்கியே நெறியில் கெட்டார்.
விதவிதமாய் மோசடிகள் வித்தையென நித்தமுமே
வெங்கொடியோர் கலையாய்ப் பயில்வார்.
வேகத்தில் அகப்பட்டோர் விடுபடவே முடியாமல்
வேதனையில் தினமும் நைவார்.
நிதம்ஊற்றும் பாலிலே நீர்கலந்தால் குற்றம்தான்,
நெஞ்சமது பொறுக்கும் நிலையே.
நேயமிலாக் கலப்படத்தார் நிறையவே பொருள்குவிப்பார்
நிகரிலா உயிர்தான் விலையே!
மதங்கொண்டோர் விமானங்கள் வானிலே கடத்துவார்
வன்முறையை எதிர்ப்போம் நாமே
வகைவகைத் தீமைகள் வளர்தற்குப் பொருளாசை
வழிவகுத்தால் அழிவோம் வீணே!

காய்கறிகள் சந்தையிலே காசுக்கு வாங்குகிற 11
காலத்தை நாமோ அறிவோம்.
கழிசடைகள் மனிதநேயம் கடுகளவும் இல்லாதார்
கவலையிலாச் செயல்கள் புரிவார்.
தாய் நாட்டைச் சேய்நாட்டைத் தரைமட்டம் ஆக்குகிற
தரமுயர்ந்த ஆயுதம் பலவாம்
சந்தையிலே விற்கிறார் தடையில்லை, இதனாலே
தரணியிலே விளைதல் கலகம்.
வாய்மூடிப் பார்த்திருக்க வணிகமெனச் செய்வாரே
மனிதஇனம் இவரால் மாளும்.
வஞ்சத்தை ஒழித்தாலே வாழ்வாங்கு வாழலாம்
மானமுடன் உலகம் வாழும்.
பேய்களோ அறிவுரையைப் பெருவிருப்பாய்க் கேட்பதுண்டா?
பேச்சுக்கோ இடமே இல்லை
பேராசை கொண்டவரைப் பெருமதம் பிடித்தோரைப்
பிடித்தழித்தால் போமே தொல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தமதம் அன்பதனை எடுத்திங்கு பேசவிலை? 12
எடுத்தவற்றை மீண்டும் கற்போம்.
இயைந்தவொரு மதத்தாரே ஏறுக்கு மாறாக
இருப்பதனை என்ன வென்போம்
தொந்தரவால் மக்களினம் தொல்லையை அடையவா
தூயவர்கள் மதங்கள் கண்டார்.
சொல்லிவைத்த நெறிகளிலே துளிகூடத் தவறில்லை
தோள்சுமக்கத் தவறி விட்டோம்.
சிந்தனையில் என்றைக்குத் தேல்வந்து கொட்டியதோ
திசைகெட்டுக் குருடர் ஆனோம்
தேயமெங்கும் மதவெறியர் தினமுமே பெருகுகிறார்
தீய்ப்பதற்கு வழியைக் காணோம்.
தந்தபெரும் மதத்தாலா தகராறு வருகிறது
தறிகெட்ட நம்மால் தானே.
தலைமுறையில் வளரவிட்டால் சந்ததிகள் நடைபயிலச்
சாலையின்றி அழிவார் வீணே.

பொதுவாக மனிதமனம் புல்முளைத்த வயலாகப் 13
போனதற்குச் சாட்சி உண்டாம்
புல்லர்கள் உலகத்தின் புல்லுருவி நாளுக்குநாள்
புற்றீசல் போல்மு ளைப்பார்
எதுவுமே செயஅஞ்சார் இகழ்வென்ற நினைவில்லார்
ஏராளம் பெருகி விட்டார்.
இப்போக்கை வளரவிடின் இவ்வுலகில் கற்காலம்
எழுமென்ற நினைப்பும் இல்லார்
புதுமைப்பெண் மோனிகா போட்டியிலே வெல்வதனைப்
பொறுக்காதான் என்ன செய்தான்?
பொய்வேட தாரியவன் பூவுடலைக் கத்திகொண்டு
புகழ்தடுக்கக் குத்தி விட்டான்.
இதுவொன்றே உலகத்தின் இழிநிலைக்குச் சான்றாகும்
இழிகுணத்தார் ஒழிக்கும் நாளே
எழிலான பொற்காலம் எழுகின்ற நாளாகும்
ஏற்றிதனைச் செய்வோம் நாமே.

ஆண்டுகளோ ஆயிரமாய் ஆனபின்னர் கனிவளங்கள் 14
ஆழத்தில் உருவம் கொள்ளும்.
அறிவியலின் நுட்பத்தால் ஆய்ந்தவை எடுக்குங்கால்
அகிலத்தின் நெஞ்சம் துள்ளும்.
வேண்டுமட்டும் கிடைக்குமென்ற வெல்லம்போல் செய்தியினால்
மேலுமே இன்பம் பெறுவார்
விலையிலாப் பெருவளத்தால் வீறுகொண்டே நம்நாடு
விளங்குமென இன்பம் உறுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாண்டபுகழ் நாட்டின்மேல் மனக்கசப்பை வல்லரசு
மனம் கொள்ளும் நிலமை வந்தால்,
மலையுயர நெருப்பெரிய மாண்பின்றி ஏவுகணை
மாறாமல் விடுப்பார் அந்தோ.
பூண்டோடு பெருஞ்செல்வம் பூமித்தாய் தந்தவளம்
பொசுக்குவது சரியா சொல்வீர்
பொல்லாங்கைத் தடுப்பதற்குப் பொறுப்பாகத் திட்டமதைப்
போட்டோமே என்று செய்வீர்?

மற்போரின் போட்டியிலே மனிதமலை மேடையிலே 15
மார்தட்டி மோதும் பொழுது
மலையிரண்டின் நடுவிலே மலைபோன்ற நடுவரோ
மறுகியே தவிப்பார் அழகு.
சொற்படியே விளையாட்டைத் தொடராத போதிலே
தூக்கியே நடுவர் தடுப்பார்.
தோள்வலிமை பெற்றவராம் சோர்விலா நடுவர்க்குச்
சூழநிற்பார் பாராட்(டு) இசைப்பார்.
அற்பமெனும் செயல்புரியும் அடங்காத நா(டு) அடக்க
ஐ. நா.வை நம்ப லாமா?
அதனுடைய செலவிற்கே அதன் உறுப்பு நாடுகளை
அதுகேட்கும் நிலமை யாலே
அற்புதமாம் அமைப்பாக ஐ. நா. வை மாற்றினாலே
அஞ்சுவார் கொடுமை செய்வார்.
அந்நாளும் எந்நாளோ அதுவரைவில் வாராதோ
அதுவந்தால் பொற்கா லந்தான்.

எல்லைகளின் சிக்கலால் இன்றளவும் சிக்கியே
எல்லோரும் சண்டை செய்வார்
''எத்தனை கோடியெனினும் ஏற்போமே திட்டங்கள்
இருக்கட்டும்'' என்றும் சொல்வார்
பொல்லாத விலங்குக்குணம் போகாத வரையிலே
பொற்காலம் தள்ளிப் போமே
பொதுவான ஐ. நா. வோ பொருந்துமுயர் பலமின்றிப்
பொம்மையாய் இருக்க லாமா?
வல்லரசு படைக்கருவி வடிவமைக்கும் போதிலே
வரவேண்டும் ஐ. நா. விற்கே
வந்தங்கே அனுமதியை வாங்கினால் பேரமைப்பாய்
வளருமே ஐ. நா. நன்றே
அல்லலினால் மடிவார்க்கே அஞ்சலியைச் செலுத்துகிற
ஐ. நா. வை மாற்றி னாலே
அஞ்சாத நாடின்லை அவனியிலே என்பதின்றி
ஐ. நா. வே நிமிரு மாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்ற நின்ற படியிந்த நிலவுலகை வேதியரின் 17
நிலையழிக்கும் மருந்துக் கலவை
நேர்மையிலா விஞ்ஞானி நிறையவே கண்டுதந்தார்
நினைத்தாலே கலக்கும் உலகை
இன்றைக்கு விஞ்ஞானி இதற்காக வருந்தலாம்
எல்லோரும் இறத்தல் சரியா?
எக்காளம் போடுபவன் இவ்வுலகம் என்கையில்
என்றிதனால் உறுமித் திரிவான்
ஒன்றாகித் தலைவரென உலகத்தில் உள்ளோர்கள்
உணர்தலே உலகத்(து) உயர்வே
ஒப்பில்லா முடிவதனை உடனேயே கண்டால்தான்
உள்ளபடி பெரிய சிறப்பே.
நன்றில்லா மருந்துவகை நாளைக்கே அழிக்கவே
நடுவர்முன் பொறுப்பேற் போமே
நயவஞ்ச மருந்தாலே நானிலமே அழியுமே!
நல்லமனம் வாழ்த்துவோமே!

வருத்தமொன்றால் இவ்வுலகம் வாடியின்று நைகிறது 18
வந்ததுவோ புதிய திமை
வழக்கத்தால் பழக்கத்தால் வந்தபெரும் தீமையை
மாய்ப்பதுவே முதலில் வேலை.
ஒருத்தனுடன் ஒருத்திதான் ஒன்றிநின்று வாழ்வதுவே
உயர்வான வாழ்க்கை என்றார்
உல்லாச மாகவே உளம்போன போக்கிலே
ஊர்சுற்றி மேய்ந்தார் கெட்டார்.
பொருத்தமிலாப் பழக்கமுடன் பொல்லாத ஓரினத்தின்
புன்மைதரு சேர்க்கை கோரம்.
பூவுலகில் மனிதஇனம் பொசுக்குகிற 'எய்ட்சு' இன்று
பூதமெனப் பாயும் நேரம்
கருத்திலே இளைஞர்கள் கண்டிப்பாய்க் கொள்வேண்டும்
கைகூப்பிக் கேட்பேன் நானே
கவலைக்கோ ஒழுக்கந்தான் கண்கண்ட மருந்தாகும்
கடைப்பிடிக்க வேண்டு வேனே!

பதினாறு செல்வமெனப் பண்டையோர் விரித்தாரே 19
பதினாறும் பிள்ளை இல்லை.
பார்வாழ அறிஞர்கள் பகுத்தறிந்து சொல்லியதைப்
பறக்கவிட்டோம் பெரிய தொல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் கூடச் சிலநாட்டார் இன்றைக்கும் பிள்ளைபெறின்
இன்பமென வசதி செய்வார்
எங்கெங்கு வேண்டுமோ இனப்பெருக்கம் கூடட்டும்
இல்லாத நாட்டார் நைவார்
நதிபெருகின் வளம்கூடும் நாம்பெருகின் வளம்குறையும்
நாம்கண்ட உண்மை இதுவே
நல்குரவால் வாடுகிற நாட்டோர்கள் உணர்ந்தாலே
நாளைபொற் காலம் வருமே
எதிர்நீச்சல் போட்டவே எவருமே விரும்பாரே
இதைக்கொண்டால் பெருகும் கேடே
எதிலுமே வேற்றுமை எவருமே கொள்ளலர்ம்
இதில்கொள்வோம் ஒருமைப் பாடே!

ஒவ்வொரு நாட்டிலுமே உருவாகும் பிரச்சனை 20
ஒருநூறாய் ஆகும் காலம்
உள்நாட்டுப் பிரச்சனை உடனேயே எதிரொலிக்க
உருகுமே இந்த ஞாலம்.
ஒவ்வாத சாதிவெறி உளம்தூண்டும் மொழிவெறி
உள்நாட்டில் கலகம் தூண்டும்
உலகத்தின் அமைதிக்கே ஊறுதனை விளைவிக்கும்
உள்நாட்டார் உணர வேண்டும்.
இவ்வகையாய்ப் போராட்டம் எழுகின்ற போதிலே
இருந்தவற்றைப் பேசித் தீர்ப்போம்
எரியுமுன் நெருப்படக்கல் எளிதாகும் மீறினால்
எழும் அறிவின் துணையால் தீர்ப்போம்.
எவ்வாறு போனாலென்? எந்நாட்டார் அழிந்தாலென்?
என்பதனை அறிஞர் ஏலார்
எழுகின்ற பிரச்சனை எங்கெனினும் தீர்வுரைக்க
ஏற்போரே என்றும் மேலோர்!

முதற்பரிசில் பெற்ற கவிதை:
எழுதியவர்: கவிஞர் சோம சிவப்பிரகாசம் அவர்கள்
கீழ்ச்சிவல்பட்டி,
பசும்பொன் முத்துராமலிங்கம் தேவர் மாவட்டம்.
தமிழ்நாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக பொற்காலம்

2

வருகவொரு பொற்காலம் வையத் தினிகண்
வறுமைத்தீ சுட்டவடு பாலை மண்ணை,
பொருட்பார்வை யால்மழுதம் ஆக்குதற்கும்
பரையோடும் காயத்தை ஆற்று தற்கும்;
கருக்கொண்டால் குழந்தைவெளி வருதல் வேண்டும்
காலமெல்லாம் தாய்வயிற்றில் இருந்து விட்டால்,
தெருவென்ன பேசுமிந்தச் சமுதா யத்தில்
திருட்டன்றோ முடிகுடிக் கொண்ட தின்று!

மின்மினிகள் சூரியனின் வேடம் போட்டு 2
மிகுவிருளை விரட்டுவதாய்க் கூச்சல் இங்கே;
பொன்னுக்கு வீங்கிகளின் ஆட்சிக் கட்டில்
பொழுதேநீ விடியாதே என்ற ரற்றிக்
தன்னலத்துத் தாலிக்காய்ச் சாப மிட்ட
தலைமைகளை யினிக்கத்தம் சுருட்டல் வேட்டை
இன்னல்களைச் சுமந்ததனால் வினாக்கு றிக்குள்
இருக்கின்ற பொதுமக்கள்; ஒழுக்கக் கேடு!

திசைகளையே உறவாக்கிக் கொள்ளப் பாலம் 3
நேலையது கட்டுவதைத் தகர்த்து விட்டு
விசையோடு கல்லறைகள் சமைத்துக் கொண்டு
விளக்கில்விழ் விட்டில்களாய் மாய்கின் றார்கள்.
அசைபோட்டுச் சிந்திக்கத் தெரியவில்லை
அறத்தாய்க்குச் சிறைவீடு முறையா ஈது?
பசையுடம்பில் எல்லாமே ஒட்டிக் கொண்டால்
பஞ்சைக்கு வாழ்வேது? திருத்தம் ஏது?

மாயமான் காட்டுகின்ற கல்விக் கூடம்! 4
மாண்புமிகும் மந்திரிகள் சித்து வேலை
நேயமிலா நெஞ்சத்தைச் சுமந்து சுற்றும்
நெடுமரங்கள் போல்மாந்தர் அடிமை மோகம்.
வாயசைவில் சொர்க்கத்தைப் படைத்துக் காட்டி
வாக்காலே போகர்களாய் வாழும் வர்க்கம்.
தாயன்பைக் காணாத சேய்கள் போலத்
தரித்திரர்கள் அழுங்குகிறார் சொந்த நாட்டில்!

கல்யாணச் சந்தையிலே தன்னை விற்றுக் 5
களங்கத்தைப் பூசிக்கொண் டாடுகின்ற
செல்வாக்குப் பொய்முகங்கள் செடிகள், மாயத்
திரைத்தீவு களைத் தேடும் திசம்பர் பூக்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைப்பூப் போதுகளைத் கொதிக்க வைக்கும்
முரட்டுரக வெறிநாய்கள்; கழுகுக் கூட்டம்:
எல்லாமே சாகாத வரத்தைப் பெற்ற
இராவணன்போல் நித்தியமாப் இருக்கக் கண்டோம்.

6 பாம்புக்குத் தவளையூரில் பாராள் மன்றப்
பதவிவந்து கிடைத்தாற்போல் எங்கள் ஊரில்
வீம்புக்கு நிற்பவரை வளர்த்து விட்டோம்;
வேரில்வெந் நீரூற்றிக் கொடிசெழிக்கப்
பூம்பந்தல் களைப் போட்டோம்; புனுகு பூசில்
புண்மறைக்கப் பலதிட்டம் போட்டு விட்டோம்
காம்பின்றிக் காய்நிலைப்ப தில்லை என்னும்
கருத்தறியா திருக்கின்றோம்; என்னே என்னே!

7 பலவண்ணக் கொடிநட்டுக் கையைத் தட்டிப்
பார்த்திருந்தோம் யானைத்தீப் பசியால் வாடி;
குலஞ்சாதி மதக்குட்டை களிலே ஊறிக்
கும்பகர்ணத் தூக்கத்தில் விழுந்து விட்டோம்
அலகையெது தெய்வமெது புரிய வில்லை;
ஆரவார மயக்கின்னும் தெளிய வில்லை.
இலம்பாட்டிக் கெதிராகப் போர்தொ டுக்க
என்னாட்டார்க் கெழுச்சியிலை மனமும் இல்லை!

8 கணனிகளின் செயல்வித்தை! வானில் சுற்றிக்
கணக்கெடுப்பு நடக்கின்ற செயற்கைக் கோள்கள்
மனிதகுல வேரறுக்கும் அணுவாய் தங்கள்!
மனவேக விண்கலன்கள் யாவும் கண்டோம்;
பிணிதீர்க்கும் மருந்தொன்றைக் கண்டோ மாநாம்?
பெருவாழ்வுக் கத்திவாரம் அமைத்திட் டோமா?
தனித்தனியாய்ச் சிதறுகிற மனித சக்தி
தனைக்கூட்டி உறவோக்க என்ன செய்தோம்?

9 போகாத ஊருக்குப் பயணம் செய்தும்
போதைதரும் மருந்துகளில் தனையிழந்தும்
நோகாமல் வாழ்வதற்கு விரும்பு கின்றோம்
நுண்ணறிவு வளர்ந்தாலும் பண்பா டில்லை;
ஆகாத மண்மேடு பொன்மே டாக?
ஆலைச்சக் கரம் நாளும் கழன்றி டாதா?
பாகாக உருகுகின் றோம் தேயம் செல்லும்
பாழ்பட்ட நிலையெண்ணி ஒவ்வோர் நாளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியாட்சி மருத்துவத்தால் தீரும் நோய்கள் 10
கோலெடுத்தார் வழிமுறையால் பல்கிற் றிங்கே
விடியவில்லை காரிருட்டுக் கடத்தல் கப்பற்
வியாபாரி பாதுகையோ இந்த நாடு?
இடிபாடு களுக்கிடையில் மக்கள் கூட்டம்
இருப்புடையார்க் கிந்நாடு வேட்டைக் காடு!
படித்தாலும் பணியில்லை; வீரக்தித் தீயில்
பன்னூறு திறனெல்லாம் சாம்பல் சாம்பல்!

மாமுனிக்கும் திரைமயக்கம்; இளசு கட்கோ, 11
மனம்நிறைய நெடுங்கனவு; உண்மை யில்லை;
சோமனெனும் நிலவில்கால் வைத்த பின்னும்
சோகத்தின் சுவடிங்கே பதிய லாமா?
சேமமுறச் செய்யாமல், குண்டு வீசும்
செயல்முறையில் வல்லரசு வீழ லாமா?
கோமகன்கள் திமிராலே குருதி யாறு
குதித்தோடல் முறையாமோ இறைவன் மண்ணில்?

பெருக்கெடுக்கும் வெள்ளத்தால் பஞ்சம் ஓர்பால் 12
பெருவரட்சி நிலையாலே ஒருபால் பஞ்சம்!
தெருக்களிலே தண்ணீர்க்குத் தவம்கி டக்கும்
தேவையென்ன இவ்வுலகில்? யாரின் குற்றம்?
கருக்கொண்ட சிந்தனைகள் இல்லார் ஆட்சிக்
கட்டிலிலே துயில்வதனால் அன்றோ யாவும்...?
வருகவொரு பொற்காலம் இக்கல் வெட்டு
வரவேற்புப் பூபாளம் விரைந்தே வா! வா!

அண்டகோடிச் சூரியர்கள் கண்க ளார்க, 13
ஆனாலும் குளிர்ததும்பும் விழிக ளோடு,
வன்முறையை அடக்குகிற வன்மை யாக-
வறுமையினை மாற்றுகிற செல்வ மாக-
உண்மைதனைக் காப்பாற்றும் நெடிய னாக-
உள்மனத்தை யும்தடவு தோழ னாகப்
பெண்மையினைக் காத்தளிக்கும் தாய்மை யர்கப்
பேறளிக்கும் பொற்காலம் வருக இன்னே!

பனிஇமயப் பொருப்புவந்து மாலை போடும் 14
பசிபிக்மா கடலெழுந்துன் னடிது லக்கும்;
தனித்தன்மை யுடனிங்கே வருவாய்; சூழ்ச்சித்
தந்திரங்கள் பொடிபடநீ விழித்துப் பார்ப்பாய்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குனிந்ததலை நிமிரட்டும் உன்னால்; கேள்விக்
குறியெல்லாம் வியப்பாக உருமா றட்டும்!
பனிப்படலம் நிவரவால் நில்லா தோடும்
பகற்கொள்ளை செல்லாக்கா சோலை யாகும்.

நதியெல்லாம் நாட்டுடமை; தண்ணீர்க் கேங்கும் 15
நகர்மக்கள் இங்கில்லை பஞ்சம் இல்லை;
விதிவலிது உபதேசம் யாண்டும் இல்லை
வியர்வைமணி செல்வத்தைக் கொடுப்ப தாலே;
புதிதான யந்திரங்கள் நிறைந்த போதும்
போர்ப்பரணிக் கிடமில்லை அமைதி யாலே!
அதிவேகப் பயணந்தான் என்றா லும்நம்
அன்புக்குத் தடையில்லை கொடுமை யில்லை.

தெருவிளக்கு மவிதர்களை வணங்கும்; சத்திய 16
தீபங்கள் மனிதரென மகிழ்ந்து நிற்கும்;
கருமேகம் வந்துவந்து மழைப்பூ தூவும்
காவல்நிலை யங்கள் குறள்நூல் ஆயும்!
இருபாலார்க் கும்வேலை வாய்ப்பி ருக்கும்
இல்லையென்ற சொல்லில்லை வளங்கள் பொங்கும்;
இரும்பாலை, கரும்பாலை, துணிகள் நெய்யும்
யந்திரங்கள் செய்சாலை எல்லாம் உண்டு.

பொய்ச்சான்று பகர்வோர்கள் யாரும் இல்லை! 17
போட்டியெல்லாம் கல்வியிலே உழைப்பின் மேலே!
நெய்யில்லா உண்டியில்லை; வழக்கும் இல்லை;
நெடுங்கதவம் அடைப்பதற்குப் பூட்டும் இல்லை
செய்விழைந்த கதிரறுக்கும் யந்தி ரங்கள்
சிதறும்நெல் மணிசேர்த்தால் நாடே வாழும்;
மெய்யுழைப்பும் அறிவுழைப்பும் இல்லாமல் உண்டு
மினுக்குகிற பேர்வழிகள் இங்கே இல்லை;

கற்கால மனிதனவன் விலங்கைக் கண்டும் 18
கடிக்கின்ற பாம்புகண்டும் பயந்து நின்றான்;
நற்காலம் அமைவதற்குச் சமூகம் கண்டான்.
நாணாளும் உழைத்துழைத்து வெற்றி கொண்டான்
தற்கால மனிதன்தன் இனத்தைப் பார்த்தே
தலைநிமிர்க்கம் கொள்ளுகின்றான் அஞ்சு கின்றான்;
பொற்காலம் வருகவுன்றன் வருகைக் காகப்
பூபாளம் பாடுகின்றோம் விரைந்து வா! வா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகெல்லாம் உறவிந்த மானி டர்க்கு! 19
ஒருகுடும்பம்; தெவனொன்றே என்று சொல்லும்
நலந்திகழ, வேற்றுமையின் வேரறுத்து
நடனம்செய் பொற்காலம் வருவாய் இன்னே
சிலபோது தாழ்ந்தார்லும் செந்நாய்க் கூட்டம்
செந்நீரை உறிஞ்சிவிடும்; தர்மம் நோகும்;
பலம்பெற்ற பொற்காலம் வருக எங்கள்
பாட்டுமெய்க் கீர்த்தியிது வரவேற் கின்றோம்.

கல்விக்கண் இல்லாதார் வையத் தில்லை 20
கற்றறிந்த ஞானிகளே இங்கெல் லாரும்;
வல்லவர்கள் என்றுசிலர் நிமிர்வ தில்லை
வறுமைக்கோ டென்றவொரு நிலையும் இல்லை;
எல்லார்க்கும் வேலையுண்டு வருவா யுண்டு;
ஏழைபணக் காரனென்ற பேதம் இல்லை;
எல்லையிலாச் சொர்க்கமிது எனத்து திக்க
இவண்வருக பொற்காலம் தடையில் லாமல்!

உணவெல்லாம் மருத்துவமாய் ஆன தாலே 21
உடல்நோயும் உளநோயும் வருவ தில்லை;
மணக்கும்செந் தாழம்பூச் சூடு தற்கு
மலரிடத்தில் பொன்கேட்கும் ஈனம் இல்லை;
குணங்கெட்ட மக்களில்லை; பதுக்கல் இல்லை
குடிகெடுக்கும் மதுவில்லை; கள்வர் இல்லை;
கணக்குமுதல் நீதிநெறி ஆய்ந்தோர் ஆட்சி!
கையூட்டுக் கிடமில்லை சிறந்த வாழ்வு.

புலிப்பாணி வைத்தியத்தால் வருவா யோநீ? 22
போர்பந்தர் வழியினிலே தோன்று வாயோ?
வலிவான மார்க்கசிய மருத்து வத்தால்,
வருவாயோ? குடியாட்சி தருமோ உன்னை?
நலிவுற்றோம் வரிசையிலே நின்று நின்று
நம்பிக்கைத் தொடர் ஊற்றே வாவா இங்கே;
பொலிவுமிகும் பொற்காலம் மனம்பூ ரிக்கப்
போரில்லா நற்காலம் வரவேண் டும்மே!

கைவிட்ட காதலனின் வரவிற் காகக் 23
காத்திருக்கும் காதலியாய் நாங்கள் உள்ளோம்;
கைவிட்டுப் போனாலும் அடுத்த மாதம்
தண்ணளிசெய் பொற்கர்லம் வருவா யென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகொட்டி வரவேற்றுப் பார்டு கின்றோம்!
கற்பகமே பொற்காலம் வருக இங்கே
பொய்விட்டுக் கொண்டிருப்பார் முகத்தில் உள்ள
பூச்சழிய வரவேண்டும் விரைந்து வா!வா!

தென்னைபலா வாழையெலாம் செழிக்க வைக்கும் 24
திருமகளே கலையெல்லாம் செழிக்க வைப்பாய்
பொன்னூஞ்சல் வானவில்லில் கட்டி வைத்துப்
புன்னாக வராளியிசை கேட்டுக் கொண்டே,
மின்னல்மகள் தன்னோடும் ஆட ஆசை!
மேதினியில் தமிழெங்கும் ஆள வேண்டும்
கன்னலைப்போல் கணுவிருப்ப தாலே, மூங்கில்
கரும்பாகிப் போவதில்லை புரிந்து கொண்டோம்!

எங்கெங்குப் பார்த்தாலும் தமிழே ஆட்சி 25
இயலிசையில் நாடகத்தில் தமிழின் ஏற்றம்;
சிங்கங்கள் போல் தமிழர் உலவு கின்றார்
செந்தமிழே கொயிலுள்ளும் முழக்கும் செய்யும்
அங்கிங்கெ னாதபடி துறைகள் தோறும்
அழகுதமிழ் நடமாடும் செயல்கள் செய்வாய்
எங்களுக்கே எழுத்துலகில் முதன்மை; நேர்பல்
பரிசுதரும் பொற்காலம் விரைந்து வா!வா!

குமரிமுனைக் கன்னியரை யப்பான் நாட்டில் 26
கொடுத்தந்தத் தேயப்பூக் களைக்கொ ணர்வோம்;
அமெரிக்கக் குபேரர்களை நெறிப்ப டுத்திக்
கர்சுமீர அழகிகளிற் கட்டி வைப்போம்!
நமதிளைஞர் அரபியர்வின் மாப்பிள் ளைகள்;
நாடெங்கும் மனத்தொடர்பால் பிணைத்து வைப்பாய்;
சமவெளியும் குறிஞ்சிமுல்லை ஒன்றாய்ச் செய்யும்
சமதர்மப் பொற்காலம் வாவா இங்கே.

பழுத்துநிற்கும் கற்புத்தீ யுனது பார்வை! 27
பர்ண்டியனின் நீதிநெறி ஆட்சிச் செங்கோல்;
அழகுரலுக் கோடிவரும் சிறந்த அன்னை
அழிவுசெய நினைப்பவர்க்கு ருத்ர மூர்த்தி!
உழுதொழிற்கு மழைமேகம்; காத லர்க்கோ
ஊறுசெயா வெண்ணிலவு தென்றல் கர்ற்று!
எழுத்துலகச் சிற்பிகளை ஏமாற் றாத
ஈடில்லாப் பொற்காலம் வருக இன்றே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலிகொல்லப் பீரங்கிப் படையெ டுப்பும், 28
எதிரிகளின் குண்டுக்கு வானெடுப்பும்,
மலிவாகிப் போனதித்தப் புனித மண்ணில்;
மனிதவளம் பெருக்கெடுக்கச் செய்வா ரில்லை!
அலிகளுக்குத் திருமணத்தை நடத்திப் பார்க்கும்
அரசியல் சீர்திருத்தத்தால் அகதி யானோம்;
வலிவான பொருப்புத்தோள் நிமிர்த்தி, எல்லா
வளத்தேர்டும் பொற்காலம் வருவா யிங்கே!

சந்தனக் காட்டில்தீப் பற்றிக் கொண்ட 29
சங்கடத்தை அணைப்பதற்கும் முடிய வில்லை;
எந்தமிழர் நிலையெண்ணிக் கண்ணீர் வார்த்தேர்ம்
இனியதொரு வைகறையே பொழுதே வா! வா!
கந்தகம் நீ எரிமலைநீ அமுத மும்நீ
கற்பகக்கா நிறைசொர்க்கம் யாவும் நீயே
அந்தகார இருள்விலக்கும் கோடி கோடி
அமுதப்பொற் கிரணமுடன் எழுந்து வா! வா!

திருக்குறளுன் நெஞ்சாக அமைந்தி டட்டும் 30
தீண்டாமை கருப்புவெள்ளை நோய்தீ ரட்டும்;
உருகிவரும் பனிநதியுன் செயலா கட்டும்;
உலகெல்லாம் உன்னுடலாய் விரிவா கட்டும்;
பெருகுகங்கை வால்காவும் கதைபே சட்டும்
போரொழிந்து ஈழத்தில் வளமேர்ங் கட்டும்
வருகவொரு பொற்கால்லம் வசந்த காலம்
வாழ்வெல்லாம் பேரின்பம் பொழியும் காலம்.

இரண்டாம் பரிசில் பெற்ற கவிதை:

எழுதியவர். **புலவர் கபிலவாணன் அவர்கள்.**

சென்னை 21.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வருக பொற்காலம்"

3

சாதி , மதம்

அன்றிருந்தார் சாதியின்றி மதமு மின்றி 1
அனைவருமே சமமென்று வாழ்ந்து வந்தார்;
குன்றிலிட்ட விளக்காகத் தமிழர் பண்பு
குவலயத்தில் ஒளிவீசித் திகழ்ந்த தென்பார்;
இன்றந்தச் சீர்பண்பை இழந்து விட்டார்;
எண்ணற்ற சாதிகளில் புகுந்து கெட்டார்:
ஒன்றுபட்டு வாழ்ந்தவர்கள் உறவு கொள்ள
ஒப்பாமல் குலப்பெருமை பேசு கின்றார்.

திருவார்ந்த திராவிடத்தை திராவி டர்கள் 2
சீரோடும் சிறப்போடும் ஆண்டு வந்தார்;
இருளார்ந்த ஆரியர்கள் நமது நாட்டின்
எல்லைவழி புகுந்துகுடி ஏற லானார்;
பொருளார்ந்த நூலென்று மனுவைச் சொன்னார்;
பொய்க்கதைகள் பலபுகன்று மதத்தைத் தந்தார்;
அருளார்ந்த தமிழரெலாம் அருள்ம றந்தார்;
அறிவிழந்தார்; ஆரியர்க்கே அடிமை யானார்.

புங்கவர்கள் யாமென்றார் ஆரி யர்கள்; 3
புவியாண்ட மன்னரையும் மயக்கி விட்டார்,
தங்களுடை மனுமறையைப் போற்றச் சொன்னார்;
தமிழரிடை நால்வருணம் புகுத்தி விட்டார்;
அங்கமெலாம் பதறிடவே எதிர்த்து நின்ற
அருந்தமிழர் தீண்டாதார் ஆக்கப் பட்டார்;
பங்கமிலாத் தமிழரெலாம் வருண பேதப்
பள்ளத்தில் வீழ்ந்ததிலே உழலு கின்றார்.

தெருவுக்கோர் சாதியினர் எனவாழ் கின்றார்; 4
தினந்தோறும் சண்டையிட்டு மாளு கின்றார்;
ஒருவருடை சாதிபற்றி இழிவாய்ப் பேசி
உவக்கின்றார்; காலத்தைப் போக்கு கின்றார்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமனிதர்க் குள்சாதி எங்கே என்றால்
எவருமதன் இருப்பிடத்தை உரைத்தா ரில்லை;
பெருமைகளைக் குலைத்தொருமை குலைக்கும் சாதிப்
பேய்விரட்டும் நாளேபொற் கால மாகும்.

செட்டியென்றும், முதலியென்றும் கவுண்ட னென்றும் 5
செங்குந்தன், படையாட்சி, நாயக்கன் என்றும்
மட்டில்லாச் சாதிகளைச் சொல்வார்; சாதி
வழக்கிட்டு வாழ்நாளை வீணில் தள்வார்;
ஒட்டிக்கொண் டிருக்கின்ற சாதிப் பேயை
ஒதுக்கிவிடும் நாளேபொற் கால மாகும்;
கட்டுக்குலை யாஒருமை காண்ப தற்குக்
கடிதாக வருகவென்போம் அப்பொற் காலம்.

நாட்டினிலே வயங்குமதங் களினால் மூட 9
நம்பிக்கை தலைவிரித்தே ஆடு தையா!
ஆட்டினையும் மாட்டினையும் பலி கொடுத்தே
அருள்கிடைக்கும் எனநம்பி ஆடு கின்றார்;
வீட்டினிலே கோவிலிலே பலதெய்வங்கள்
வேண்டுகின்றார்; நோக்கம்நிறை வேறு மென்று
சீட்டினிலே எழுதிமரக் கிளையில் கட்டித்
தினமும்மரம் சுற்றிவ ருகின் றார்.

எம்மதமே உயர்வென்பார் இசுலாம் காரர்; 7
இல்லையில்லை எனமறுப்பார் கிறித்து வத்தார்;
நம்முடைய இந்துமதத் திற் கீடாக
நவிலஒன்றும் இல்லையென்பார் இந்துக் காரர்;
அம்மம்மா! மதங்களெல்லாம் மதம்பி டித்தே
ஆடுகின்ற இழிநிலையை என்ன சொல்வேன்;
இம்மண்ணில் மதச்சண்டை ஓயும் காலம்
என்றோ? அக்காலம்பொற் கால மாகும்.

தெய்வத்தை வணங்கமதம் தேவை என்பார் 8
திருடர்களின் வாய்ப்பிதற்றல் மதிக்க வேண்டாம்;
உய்வதற்கு மதம்கூறும் தெய்வம் தேடி
ஓடோடிக் களைப்படைந்து வீழ வேண்டாம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யன்பாய் உளிரிகளுக் குதவி செய்யின்
மேலான ஒளிக்கடவுள் அருளை டைக்கும்;
எய்யின்றி வாழ்வதற்குத் தியானம் போதும்;
ஏத்துதற்குப் பலிவேண்டாம்; எதுவும் வேண்டாம்.

இன்றிருக்கும் மதங்கள்இடர் தருவ தாலே 9
எல்லோரும் மதப்பற்றை விடுதல் வேண்டும்;
என்றென்றும் எம்மதமும் சார்ந்தி டாமல்
எங்கிருந்தும் இறைதொழுது வாழ்தல் கூடும்;
நன்றென்றே இக்கருத்தை நாடே ஏற்று
நடக்கின்ற காலம்வரின் மாந்தர்க் கெல்லாம்
அன்றுதான் பொற்காலம்! வருக வென்றே
அந்தப் பொற் காலத்தை அழைப்போம் வாரீர்.
(எய்யின்றி — துன்பமின்றி
ஏத்துதற்கு — வணங்குதற்கு)

கடவுள்

கடவுளுண்டே எனச்சொல்வார் உண்டே; எங்கும் 10
கடவுளில்லை என்பாரும் உண்டே; என்றும்
தொடர்கதைபோல் இவர்கண்ட வாதப் போர்தான்
தொடர்ந்துகொண்டே இருக்கின்ற நிலைமை உண்டே;
சுடர்ஒளியாய் ஒருகடவுள் உண்டே என்று
சொல்கின்ற, தொழுகின்ற கூட்டத் தாருள்
அடியவனும் ஒருபக்கம் நிற்ப தாலே
அறிந்தவற்றுள் சிலகருத்தைச் சொல்வேன் கேளீர்!

தெருவுக்கோர் கோவிலென்றும், கோவி லுக்குள் 11
இசைக்கெட்டுத் தெய்வமென்றும் வைத்துக் கொண்டு
மருளூற்றுப் பலவகையில் படையல் இட்டு
மனம்விரும்பும் வரம்கேட்டுச் செல்லு கின்றார்;
உருவற்ற கடவுளுக்கோர் உருவம் பண்ணி
ஒழுங்கற்ற முறையினிலே பூசை செய்தால்
தெருளூற்ற தெய்வந்தான் மகிழ்வ துண்டோ?
தேவைகளைப் பூர்த்திசெய வருவ துண்டோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைநிலைக்கும் படத்துக்கும் மாலை சாத்தி, 12
இலை, பாக்கு, பழம், தேங்காய் எதிரில் வைத்தே
அறைமுழுதும் மணங்கமழ வத்தி ஏற்றி
அருகுநின்று பூரஒளி காட்டிப் பத்தி
நிறைமனத்தோ(டு) இல்லத்தில் தொழுவார்; ஆனால்
நேர்மையற்ற செயல்முடித்து மகிழ்ச்சி கொள்வார்
முறைதவறி வாழ்கின்ற இந்தக் கூட்டம்
மூரியனின் திருவருளைப் பெறுதல் உண்டோ?

(தெருள் - ஞானம்; இலை - வெற்றிலை.
மூரியனின் - வலிமையுள்ள கடவுளின்.)

கல்லினால் செய்தசிலை மீது பாலைக் 13
கண்மூடித் தனமாக ஊற்று கின்றார்;
சொல்லவொண்ணாப் பசியாலே இரப்போ னைத்தான்
தொலைந்துபோ எனச்சொல்லித் துரத்து கின்றார்;
இல்லையென வாடுகின்ற வறியோர்க் கெல்லாம்
இயலுதவி செய்வதுதான் வழிபா டாகும்;
எல்லவரும் இக்கருத்தை ஏற்றுக் கொள்ளும்
ஏற்றமிகு காலம் பொற் கால மாகும்.

கடவுளென்பார் ஆணுமில்லை பெண்ணு மில்லை; 14
கவினொளியின் வடிவமென்றார் இராம லிங்கர்;
சுடர்ஒளியைப் பலர்மறந்தார் மாந்தர் போலத்
தலங்குகின்ற கற்சிலைகள் வணங்கு கின்றார்;
''இடர்களைய அருள்வேண்டும், எவ்வு யிர்க்கும்
இயலுதவி புரியின்அருள் கிடைக்கும்'' என்றே
வடலூர்மா முனிவர்உரைத் திட்டார், அன்னார்
வழிநடக்கும் காலபொற் கால மாகும்.

பலதெய்வ வணக்கத்தை விடுதல் வேண்டும்; 15
படையலின்றி ஒளிதீபம் தொழுதல் வேண்டும்;
நிலவுகின்ற உயிர்களிடம் அன்பு காட்டும்
நேர்பண்பால் இறையருளை அடைதல் வேண்டும்;
உலகமதில் வாழ்தமிழர் இவற்றை ஏற்றே
உய்கின்ற காலம்பொற் கால மாகும்;
அலகில்லா நலம்தரும்அப் பொற் காலத்தை
அகமகிழ்வாய் வரவேற்போம் வருக வென்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்

அக்கால மருதநில உயர்கு லத்தில் 16
ஆணினத்தார் உயர்வாகக் கருதப் பட்டார்,
எக்கால மும்பெண்டிர் இல்ல டங்கி
இயங்குதலே சுற்பென்று விதிவகுத்தார்
செக்கேறு வட்டத்துள்ள சுற்று தல்போல்
சீர்பெண்டிர் வீட்டுக்குள் சுற்றி வந்தார்;
அக்காலத் தாழ்குலத்தில் மட்டும் பெண்டிர்
ஆடவருக்குச் சமத்துவமாய் இயங்கி வந்தார்.

மருதநிலம் ஒழிந்தமற்ற நிலத்தில் வாழ்ந்த 17
மகளிரெல்லாம் ஆடவர்க்குச் சமமாய் வாழ்ந்தார்;
எருது, பசு, மறிமேய்க்கக் கணவன் சென்றால்
இல்லாள், பால், தயிர், வெண்ணெய் விற்கச் சென்றாள்;
பெருவலையில் ஆடவன்மீது பிடித்து வந்தால்
பெண்ணவற்றைக் கொண்டுபோய் விற்று வந்தாள்;
ஒருபுறத்தில் பெண்ணடிமை, மற்றோர் பக்கம்
உயர்ந்தசமத்துவநிலைமை திகழ்ந்த தையா!

அச்சமும், நாணும், மடனும் பெண்ணுக் கென்றே 18
அறிஞர்தொல் காப்பியனார் விதிவ குத்தார்;
நிச்சமும்அவ் விதிபோற்றச் சொன்ன ஆண்கள்
நீர்மையுறு பெண்குலத்தை அடக்கி விட்டார்;
உச்சநிலை காணஇந்தக் காலப் பெண்கள்
ஒருசிலபேர் முக்குணங்கள் உதறி விட்டார்;
எச்சமுள்ள பெண்களெல்லாம் இல்லிருந்தே
எழும்காலம் நாட்டின் பொற்கா லமாகும்.

செந்தமிழ்வாழ் நாட்டினிலே விதவை என்னும் 19
சீரற்ற ஒருசாதி திகழ லாமோ?
இந்தநிலை திகழ்தல்அவ மான மென்றே
எல்லோரும் எண்ணும்நிலை வருதல் வேண்டும்;
எந்தக்கைம் பெண்ணும்மணம் விரும்பும் காலை
இல்லத்தார் உடன்பட்டு முடிக்க வேண்டும்;
புந்தியுளார் இதைஎண்ணி விதவைச் சாதி
போக்கிவிடும் காலம்பொற் கால மாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணைமணம் புரிவதற்கு வரன்கா ணிக்கை 20
பேசுகின்றார்; பெண்வீட்டார் மறுத்து விட்டால்
மண்ணகத்தில் வேறுபெண்ணைத் தேடு கின்றார்;
மாப்பிள்ளை வாங்கமுடி யாத பெற்றோர்
கண்ணீரண்டில் நீர்பெருக்கிக் கலங்கு கின்றார்;
கடிணமமே இன்றிப்பெண் வாடு கின்றாள்
மண்ணிலிருந்த மாக்கொடுமை மறையும் காலம்
மாண்புமிகு காலம்பொற் கால மாகும்.

மொழி

தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு வாழும் 21
தமிழர்க்கே தமிழின்மேல் உயர்பற் றில்லை;
இமியளவும் தாய்மொழிக்குத் தொண்டு செய்ய
எண்ணாமல் காலத்தைப் போக்கு கின்றார்;
அமிழ்தம்வெல் தமிழ்என்றார் அந்த நாளில்
அதைமறந்தார், இந்திகற்க ஓடு கின்றார்;
தமிழ்அழிந்தால் தமிழர்பண் பழிந்து போகும்;
தமிழர்களும் நாளடைவில் மறந்து போவார்.

ஆங்கிலத்தைக் கற்றிடலாம்; ஆனால் நந்தம் 22
அந்தமிழில் அதைக்கலந்து மொழிதல் தீது;
பாங்குறுநம் தமிழும்ஆங் கிலமும் நன்கு
படித்தவரே அவைகலந்து பேசு கின்றார்;
ஓங்குபுகழ் தமிழ்அழிக்கத் தமிழ ரேதான்
ஓயாமல் உழைக்கின்றார், கொடுமை அந்தோ!
ஈங்கிவர்கள் திருந்தும்கா லம்பொற் காலம்;
இன்பமுடன் வரவேற்போம் அப்பொற் காலம்.

மணவறையில், கோவில்தனில் பார்ப்பான் அந்த 23
வடமொழியில் உளறுகின்றான்; அறிய மாட்டார்;
பிணமெனவே உணர்வற்ற நிலையில் உள்ளார்;
பேதைகளாய் வாழ்கின்றார்; பார்ப்பா னுக்குப்
பணமளித்தும் பகழ்கின்றார், தமிழைச் சாய்க்கப்
பாய்கின்ற வடமொழியை வீரட்ட எண்ணார்,
குணமிழந்த மூடரிவர் திருந்தும நாளே
கோலத்தமிழ் நாட்டின்பொற் காலமாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தமிழை அறியாதா ரிடத்தில் மட்டும் 24
நாம்ஆங்கி லத்தைப்பயன் படுத்தல் வேண்டும்;
இந்தநிலம் தனிலெங்கும் பெயர்சூட் டுங்கால்
இனியதமிழ் மொழியினிலே சூட்ட வேண்டும்;
எந்தவிடத் திலும்வேற்று மொழியி ருந்தால்
இறக்கிவிட்டுத் தூய்தமிழில் அமைக்க வேண்டும்;
சந்ததமே இவற்றையெலாம் நெஞ்சில் ஏந்தித்
தமிழர்கடைப் பிடிக்கும்நாள் பொற்கா லந்தான்.

சட்டத்தில், மருத்துவத் தில்ம ற்றுள்ள 25
சகலதுறை களிலும்தமிழ் வயங்க வேண்டும்;
கட்டிவெல்லம் போன்றதமிழ் மொழியிவ் இல்லாக்
கலையில்லை என்னும்நிலை நிலவ வேண்டும்;
அட்டியின்றித் தமிழ்வளர அரசாங் கத்தார்
அனைத்துவழி களிலும்துணை புரிதல் வேண்டும்;
முட்டின்றி இவைநிறைவு பெறுங்கா லந்தான்
முருகுதமிழ் நாட்டின்பொற் கால மாகும்.

பொருள்

உழைக்கின்ற கூட்டமொன்று, பிறர்உ ழைப்பை 26
உட்கார்ந்தே உண்கின்ற கூட்ட மொன்று;
பிழைக்கவழி இலையென்று பிச்சை கேட்கும்
பிற்போக்குக் கூட்டமொன்று;பிறரை ஏய்த்துக்
கொழுக்கின்ற கூட்டமொன்று; பொருள்ப றிக்கும்
கூட்டமொன்று;மதுகுடித்துப் பிறர்க்குத் தீமை
இழைக்கின்ற கூட்டமொன்று திகழும் காலை
இந்நாடு முன்னேற்றம் காணல் உண்டோ?

மணணில்ஏர் பூட்டியுழும் உழவ னுக்கு 27
மண்சொந்த மாயில்லை; மனையில் குந்தி
உண்ணுகின்ற பணக்காரன் நூறு காணி
உடையவனாய் வாழ்கின்றான்; உழவன் நாளும்
கண்ணில்நீர் வடிக்கின்றா ன் வயிற்றுக் கின்றி;
கா செண்ணிக் களிக்கின்றான் பணக்கா ரன்தான்;
மண்ணகத்தில் இக்கொடுமை மாற வேண்டும்;
மாறுகின்ற காலம்பொற் கால மாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28 கற்றவர்கள் பட்டத்தைக் கையில் ஏந்திக்
கணக்கற்ற அலுவலகம் ஏறு கின்றார்;
உற்றஒரு வேலைகிடைக் காத தாலே
உள்ளமது நொந்தவராய் வாடு கின்றார்;
மற்றவர்போல் பொருள்சம்பா திப்பதற்கு
மயங்காமல் எத்தொழிலும் இயற்ற வேண்டும்;
கற்றவர்கள் இதையெண்ணித் துணியும் காலம்
கலையோங்கும் நாட்டின்பொற் கால மாகும்.

29 எத்துணைதான் அறிவியலில் வளர்ந்திட் டாலும்
இன்கல்வித் துறையினிலே ஏணூற் றாலும்;
சித்தம்மயக் கிடும்இசையில் சீருற் றாலும்;
திண்ணியமுப் படைவயங்கச் செய்திட் டாலும்;
இத்தரையில் பிச்சையெடுத் துண்ணும் கூட்டம்
இருக்கின்ற வரைநமக்குப் பெருமை உண்டோ?
வித்தகர்கள், இரப்போரே இல்லா தாக்கும்
ஏற்றமுறு காலம்பொற் கால மாகும்.

30 வாழ்வதற்கு வீடின்றி மரத்தின் கீழே
வாழ்கின்றார், வாடுகின்றார் கோடி மக்கள்;
ஊழ்வினையால் நலிகின்றார் எனநாம் சொல்லி
ஒதுக்கிவிட்டால் அவர்களெல்லாம் என்ன செய்வார்?
சூழ்நிலையின் தாக்கத்தால் துயர்கொள் வோரைச்
சுற்றியுள்ள நாமன்றோ தூக்க வேண்டும்?
தாழ்வுற்றார் வீடுபெறும் நாள்பொற் காலம்;
சட்டெனவே வருகவென்போம் அப்பொற் காலம்.

மூன்றாம் பரிசில் பெற்ற கவிதை:
எழுதியவர்:- கவிஞர் முருகதாசன் அவர்கள்
அங்காளம்மன் நகர்,
பாண்டிச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக பொற்காலம்

4

நிலைமண்டில ஆசிரியப்பா

செந்தமிழ்த் தாயே செந்தமிழ்த் தாயே!
வந்தனை புரிந்துனை வணங்கினேன் தாயே!
மலர்தலை உலகில் மல்குக பல்வளம்
உலகம் எங்கும் உண்மைப் பேரொளி
நலம்பல நல்கும் நன்மைப் பேரொளி
நிலவுல கெங்கணும் நிறைந்தே வீசுக
அளவிலா வளங்கள் அருவிபோல் பொங்கி
வளம்பெருக் கிடவே வருநதி ஆதி
உளங்களின் வழியே உலகை இணைக்கும்
உலகச் சோதரர் ஒன்றாய் இணைவோம்
''மாற்றம் என்பது லானுடத் தத்துவம்''
போற்றும் அறிவியல் புதமை இதுவே
அறிவியல் பொறியியல் அனைத்தும் வளர்ப்போம்
அறிவே இயக்கும் அதுவே ஆற்றல்
''மனவளம் பெருகின் மானுடம் வெல்லும்''
''மனவழி வென்று மகாத்மா காந்தி
உலகம் எங்கும் உயர உழைத்தார்
உலகம் உய்ய உதித்தவர் புத்தர்
சகலரும் போற்றும் சத்தியர் ஏசு
இகலது நீங்கி எங்கும் ஒற்றுமை
ஓங்க உழைத்த உத்தமத் தோன்றல்கள்
பாங்காய்க் காட்டிய பக்குவப் பாதை
உலக சமத்துவம் உணர்த்தும் பாதை
உலக மக்கள் உணர்ந்திட வைப்போம்
போர்வெறி மாய்ப்போம் புத்தொளி சேர்ப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுவா யுதங்களின் ஆர்ப்பரிப் பொழிப்போம்
பாரத நாடும் பைம்பொழில் இலங்கையும்
பரந்தவோர் நர்டெனும் பழமை நினைவோம்
அறவழி உலகம் அமைத்திட உழைப்போம்
வள்ளுவர் தமிழில் வடித்து உலகே''
வள்ளல் இராமன் வனப்புரை கம்பன்
உள்ளத் துதித்தது ''உலகம் யாவையும்''
சேக்கிழார் பெருமான் செந்தமிழ் நாவின்
வாக்காய் ''உலகெலாம்'' வந்ததும் தமிழே
நாக்கினில் தமிழ்த்தேன் நல்கிய கவித்தேன்
வாக்கினில் சுவைத்தேன் வழங்கிடு கீரன்
''உலகம் உவப்ப'' உரைத்தது தமிழே
''யாதும் ஊரே யாவரும் கேளிர்
ஓதிய புலவன் ஒண்டமிழ்க் கணியன்
நீதிலா இவர்கள் தெளிந்த சிந்தையர்
உலக மானுட உறவை உரைத்தவர்
''உலகம்'' என்னும் உயர்தமிழ்ச் சொல்லை
உலகக் கொடையாய் ஒண்டமிழ் ஈந்தது
வன்முறை யாண்டும் வளர்வதா புதுமை
மென்மை யன்றோ மேன்மை நல்கும்
நன்மை நிறைந்திட நாடுகள் இணைப்போம்
மனித மனத்தின் மாண்பைக் காப்போம்
புனிதப் பணிகள் புவனியில் செய்வோம்
கனிவுறு கருணைக் கனிகள் தருவோம்
துணிவே ணையாய்த் தொண்டுகள் புரிவோம்
கற்கா லத்தில் காட்டு மிராண்டி
தற்கா லத்தில் தரமிகு மனிதன்
பொற்கா லத்தைப் புவியல் படைப்போன்
நற்கா லத்தின் நாயகன் மானுடன்
வீணில் குண்டுகள் வெடித்திடச் செய்தே
பேணி வேண்டிய பேருயிர்த் தொகையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீணே	அழிக்கும்	வீணர்கள்	மனத்தின்
கோணல்	புத்தி	கொடுமதி	களைவோம்
மானுட	வாழ்வின்	மாபெரும்	சீர்த்தி
மாநிலம்	எங்கும்	மகித்திட	வைப்போம்
புதுமை	வேகம்	புரியுது	புரியுது
பழமைச்	சுவடுகள்	பாரில்	மறைவதோ?
பழமை	போட்ட	பாதை	மீதே
புதுமை	என்னும்	பூவிழி	மாது
பதுமை	போல	பரகம்	புரிகிறாள்
புதுத்தொழில்	நுட்பம்	பொறியாய்ப்	பூக்கிறாள்
புதுப்புது	நுட்பம்	புரிந்திட	வைக்கிறாள்
அணுவெடிச்	சோதனை	ஆக்கப்	பணிக்கே
அணுவள	வேனும்	அதன்திசை	மாறின்
அனைவரும்	இணைந்து	அதன்திசை	மாற்றுவோம்
மனங்களின்	சங்கமம்	மானுடச்	சங்கமே
இனங்கள்	மதங்கள்	மொழிகள்	யாவும்
மானுட	வாழ்வின்	பகத்துவம்	வளர்க்கவே
வீணே	பேதம்	வளர்ப்பது	வீணே
மூளை	பலமே	மூல	பலமாம்
தோளை	உயர்த்திச்	சுடர்முகம்	மலர்த்தி
வேலை	சூழ்ந்த	வியன்குமிகு	உலகின்
ஊழை	மாற்றி	உழைப்பை	ஏற்றி
ஒருமைப்	பாட்டை	உலகிடை	வளர்ப்போம்
வறுமைப்	பேயை	வரவிடா	தொழிப்போம்
விண்வெளி	ஆய்வும்	விரைந்தே	வளருது
மண்வழி	மாண்பும்	மலர்ந்திட	வேண்டும்
அறிவியல்	பொறியியல்	அறிஞர்	யாவரும்
கருவிகள்	கண்டோர்	கணிப்பொறி	யாளர்
கணிதம்	மொழிநூற்	கலைதேர்	அறிஞர்
உலகம்	காக்க	ஓரிடம்	கூடி
நிலவுல	கெங்கும்	நேர்வழி	செல்ல
நலம்தரு	வழியை	நாடிட	வேண்டும்
எல்லா	நாடும்	எங்கள்	நாடே
எல்லா	வளமும்	எங்கும்	பொதுவே
வல்லர	சான	நாடுகள்	எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லா ஏழை நாடுகள் தமக்குத்
தொல்லை நீக்கித் துயர்துடைத் திடுக.
அறம்எனும் வள்ளுவர் அளித்த நெறியை
பரவலாய் ஆக்கிப் பாரை உயர்த்துவோம்
செயற்கை கோள்வழி சிந்தனை செலினும்
இயற்கை கோள்களின் இயக்கமும் ஆய்வோம்
மனநிலை உயர்வு மனிதனை உயர்த்தும்
குணநிலை உயரும் கொடுஞ்செயல் மாயும்
பணமே பெரிதெனும் பகட்டும் ஓயும்
முன்னோர் உரைத்த மூதுரை எல்லாம்
இன்றும் இளைஞரை இயக்கும் நற்பொறி
என்றும் வெல்வோம் எனும்நம் பிக்கை
ஒன்றிநம் உளத்தில் ஒளியை நல்கும்
சந்திர மண்டலம் செவ்வாய் மண்டலம்
எந்திரக் கோள்வழி ஏறிய போதும்
சிந்தனை வளத்தைச் செயல்படச் செய்து
உந்திடு மனவளம் உயர்த்தும் மனிதனை
என்பதை உலகில் எவரும் அறிந்தால்
எண்ணப் புதுமை எங்கும் செழிக்கும்
வண்ணப் பூக்களாய் வாழ்வும் மலரும்
இனிமை இளமை எங்கும் பொங்கும்
இனியபொற் காலம் எங்கணும் வருமே
உடலின் தூய்மை உடையில் தூய்மை
உளத்தில் தூய்மை உலகெலாம் வளர
வளமெலாம் பொங்க வாழ்வில் ஒழுக்க
நலமெனும் பண்பு நம்மிடம் சேரும்
உலகம் முழுதும் ஒன்றாய் உயர
வருங் பொற்காலம் வருக பொற்காலம்
வாழ்பவர் யாவரும் வாழிய நீடே!

முதற்திறமைச் சான்றிதழ் பெற்ற கவிதை:

எழுதியவர்:- புலவர் மெய்யாண்டவன் அவர்கள்

அரியக்குடி,
காரைக்குடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக பொற்காலம்

5

காற்றாகப் பறந்தோடும் காலந்தன்னைக்
கரையிட்டே அணைகட்டித் தடுத்தா ருண்டோ?
கூற்றினிலே காலமனதைக் கூறு கூறாய்க்
குறிப்பிட்டே மதிப்பிட்டுத் திறனாய்வோதி
மாற்றுகின்றோ மல்லாதே காலம் சாற்றும்
மறை பொருளுக் கொருவடிவம் இல்லையில்லை
நேற்றின்று நாளையென நிமிடந்தானும்
நில்லாது செல்லும்மொரு நினைவே காலம்

வேந்தர்கள்தம் செங்கோன்மைத் திறனேயன்றி
வியனுலகம் காலமதை வேறாக்காது
எந்துபுகழ் பண்பாட்டின் எழுகை வீழ்ச்சி
இருதுருவம் காலத்தை ஏற்றும் மாற்றும்
மாந்தரது வாழ்க்கைமலர் சுகந்தம் வீசின்
மலர்ச் செடியாம் காலமதன் மாண்பும் பேசும்
சாந்தனையும் நமதுமனம் செயல்கள் வேய்ந்த
சரித்திரயே காலமெனல் பொருத்த மன்றோ?

தங்கமணி முடிபுனைந்த சங்க காலம்
தனையடுத்து வடிவெடுத்த தறநூற்காலம்
இங்களெனத் திகழ்ந்ததிரு இறைநூற் காலம்
திரையனைத்தும் இசைபரப்பும் காவியங்கள்
பொங்கியொளி பொழிந்த புகழ்ச் சோழர்காலம்
புதியபிர பந்தவகைக் காலம் என்றே
எங்களது நெறிமுறையாம் வாழ்க்கைப் போக்கின்
எதிரொலியே காலமென என்றும் பேசும்

'பொற்காலம் வருக' எனப் புற்றீசல் போல்
புறப்பட்ட சிந்தனைக்கோர் அளவேயில்லை
கற்காலம் வில்லுடனே கல்லு மேந்திக்
காடாண்ட பரம்பரையின் கதைகள் கேட்டேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்காலத் துரையாடல் எழுதித் பாட்டுச்
சுகிர்த்தகலை அழகுநடச் சுனைக்கண் ஆழ்ந்தேன்
மற்காலம் எனப்பொருதிக் குருதி பாயும்
மனித பலிக் களங்கண்டே மயங்கித் தீர்த்தேன்

நிலவளமும் நீர்வளமும் நிகறில் லாமல்
நிமிர்ந்தோங்கு மலைவளமும் நெஞ்சையள்ளும்
கலைவளமும் மக்கள்மன வளமில்லாத
காலத்தைப் பொன்னாக்கும் இரசவாத
நிலைவளரச் செய்திடுமோ? நிலவைக் கண்டே
நித்திலப்பொற் கடல்தங்கும் அலைகள் பொங்கும்
பலவளமும் மனிதவளப் பரப்பிற் பூக்கும்
பண்பினிலே பொற்காலம் குலுங்கக் காண்போம்

தனிமனித விடுதலைக்குத் தலைமை யீந்து
தன்மானப் பயிர்வளர்க்கும் தருமம் காத்தே
இனமொன்றே மனித இனம் என்றே போற்றும்
இதயத்திற் பேரின்பத் தன்மை பொங்க
மனம் வார்த்தை செயல் கரணத் தூய்மை சேர
மண்பாடு பண்பாடு மலர்ச்சி நீடக்
கனிகுலுங்கும் பொற்காலம் வந்து வந்தே
காலடியிற் சரண்புகுதல் காண்போம் காண்போம்

தன்னலத்தின் வெற்றியதே உண்மை வாழ்வு
தமர்மகிழ்த் தான்நெகிழும் அர்ப்பணத்தால்
மன்னுலகை மகிழ்விக்கும் மலராய் வாழ்வோர்
மதுரத்தேன் வழங்கியபின் மண்ணிற் சாய்வோர்
இன்னோருவர் துயர்சகியா திரங்கித் தாங்கி
இடர்களைவோர் இருக்கின்றார் என்னும் போதே
கன்னனொடு பாலமுதுங் கலந்தே பாயும்
கானாறாய்ப் பொற்காலத் தேனாறோடும்

விலைமிகுந்த உண்மைகளை மறைந்தே மாற்றும்
வித்தகங்கள் சொற்சிலம்பம் விதைத்தே போலிக்
கலை வளர்த்தே களைபெருக்கக் கானல்மானாய்க்
கண்ணிருந்தும் விழிமூடி மயங்கிடாதே
நிலைதளரா நிறைமதியால் நிறுத்தாராய்ந்து
நீதிவழிப் போராடும் நெஞ்சத் தோடு
தலைகவிழா மக்களினம் தழைக்கக் கண்டால்
தங்காரே பொற்காலம் தாவிப்பாயும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பில்லா நோ யொன்றே அகிலத்துண்டாம்
அன்பதுவே அருமருந்தாய் அந்நோய் தீர்க்கும்
என்பதனைப் பிறர்க்கீயும் ரகசியத்தின்
ஏற்றமதைப் போற்றுகின்ற இதயங் கொண்டே
துன்பத்தால் எறும்புடலும் வருந்திடாதே
துணையருளும் தூயமனத் தருளோர் வாழ்வை
முன்வைத்தால் இருளால் ஒளிமே லோங்க
முகமலர்ந்தே பொற்காலம் முடியும் சூடும்

அறபயணம் வேகத்துள் அமைந்திடாது
அமைதியிலும் தூய்மையிலும் அடங்கி வாழும்
மறப்புயத்தின் வலிமையிலே மகிமை காண
மனிதகுலம் பட்டதெல்லாம் வரலா றோதும்
நிறந்நிமிரா டினக்கொலையில் நிலத்தை யாண்டோர்
நின்றகதை கண்டவர்கள் நிழ லேயில்லை
சிறப்புறவே நாம் வாழ்வோ மானால் இங்கே
செம்பவளப் பொற்காலம் செங்கோ லோச்சும்

காவலனே கொள்ளையிடக் கண்டே நோகும்
காணிநிலக் காரனைப் போற் கலங்கிடாதே
மேமகிழ் வெள்ளத்தே மிதக்க வேண்டி
மீளுவகை நாளடைவில் ஆய்ந்தே தேடிச்
சாவரினும் சந்சலத்தைப் புறங்கண் டோராய்ச்
சத்தியத்தின் கொடி நீழல் தியாகத் தீயில்
தாவுமிள மானெனவே பாய்வோர் தம்மைக்
தயங்காதே பொற்காலக் கரங்கள் தாங்கும்

சோதனைக்கும் வேதனைக்கும் பிறந்தே வந்த
சுடர்க்குழந்தை சாதனையாம் என்றே கூறும்
போதனைக்குச் செவிசாய்த்தே பல்லாண்டாகப்
புதையிருளில் ஒளியொளிரும் புதையல் காண
நீதிவழிப் பாதிவழி உள்ளம் சோர்ந்து
நில்லாதே எதிர் நீச்சல் நீந்துலோம் நாம்
சாதி தமிழ்ச் சாதியென லையம் போற்றும்
சான்றாகப் பொற்காலம் தோன்றல் காண்போம்

இரண்டாம் திறமைச் சான்றிதழ் பெற்ற கவிதை:

எழுதியவர்: கவிஞர் ம. விக்ரர் அவர்கள்
67, வேம்படி வீதி. யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக பொற்காலம்

6

பொற்காலம் வீழ்கின்ற மனிதன் தோன்றி
புதுமைகாண் முயற்சிக்காய்த் தினமு ழைத்துக்
கற்காலம் மட்காலம் இரும்புக் காலம்
கனியயுகம் காற்றுயுகம் எல்லாம் தாண்டி
தற்காலம் வந்துள்ளான் - இந்தக் காலம்
தாரணியில் பல்துறையும் உயர்ந்த காலம்
பொற்கால மிதுதானென் றுரைப்ப தற்குப்
போதா தோ இன்றுள்ள புதுமை யெல்லாம்?

உற்பத்தி விற்பனவு ஊர்தி வேகம்
ஒலிஒளியின் செயற்பாடு கணனிச் சேவை
கற்றுயரப் பற்பலநூல் கல்வி வானில்
கலங்கரைகள் புதுஉதயம் கணங்கள் தோறும்
நெற்றியியர் சிந்துகின்ற தொழிலா ளிக்கும்
நிம்மதியாய் அலுப்போட்டப் பொழுது போக்கு
அற்புதமாய் அதிகரித்து வினங்கு மிந்நாள்
அனுபவத்தில் பொற்காலம் ஆகி டாதோ?

வைத்தியத்தில் புரிந்துள்ள சாத னைகள்
வானத்தில் காட்டுகின்ற மாய்ம்மா லங்கள்
கைத்தொழிலில் தொழிலுட்பத் துறையில் ஏற்றம்
காலடியில் உலகத்தைக் காணும் விந்தை
மெய்ச்சிலிர்ப்பை ஏற்படுத்தும் சாத னைகள்
மேகத்தைத் தொட்டுயர்ந்த கோபு ரங்கள்
அத்தனையும் கண்டுள்ளோம் இந்த நாளில்
ஆகையினால் பொற்காலம் ஈதா காதோ?

அறிஞர்கள் நிபுணர்கள் ஆய்வாளர்கள்
ஆரூட விற்பன்னர் துறைகள் சான்றோர்
குறிகாட்டிப் பதிவெடுத்து விதிப டைக்கும்
கூர்மையுள்ள புத்திவான் பலவா னெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர்கள் கூறிவைத்த கருத்து யாவும்
அப்படியே நடந்துள்ளத் தவர்க ளெல்லாம்
அறிவித்த பிரகாரம் நடக்கு மென்றால்
அதுவே பொற்கால மென்று சொன்னார்!

உணவினிலே தன்னிறைவு வேண்டு மென்றார்
ஒன்றிரண்டு பிள்ளைகளே போது மென்றார்
கணமேனும் உழைப்பின்றி இருக்க வேண்டாம்
கண்டபடி விண்விரயம் செய்ய வேண்டாம்
பணம்தேடும் வழியென்றே பொற்கா லத்தின்
படிக்கற்கள் என்பதனைக் கூறி வைத்தார்
இணக்கத்தோ டுலகமிதை ஏற்றுச் செய்து
இன்றளவும் பொற்காலம் கண்ட தென்போம்

சிந்துநதிக் கரைதாண்டிச் சீமை சார்க்க
தேர்சினிலும் கொடிகட்டி வாழு கின்றோம்
உந்துகின்ற ஆயுதங்கள் காகி தங்கள்
ஊக்கமுடன் செய்துள்ளோம் சுப்ர மண்யர்
செந்தமிழிற் தீட்டியுள்ள கற்ப னையைச்
செயல்மூலம் காட்டியுள்ளோம் பண்ம டங்கு
எந்தவழி நோக்கினும்மா முன்னேற் றங்கள்
இவைதானா நாம்தேடும் முன்னேற் றங்கள்!

மக்களது உயிருக்கு மதிப்பு மில்லை
மானம்கற் பிவற்றிற்குப் பொருளே இல்லை
எக்கணமும் உள்ளத்தில் அமைதி யில்லை
ஏமாற்று வித்தைகளுக் களவு மில்லை
தக்காரும் "தாகாரும்" புரிய வில்லை
தாட்சண்யம் கடுகளவும் காண வில்லை
அக்கிரமம் செய்வோனே வாழு கின்றான்
அபலைகளே நீதியின்முன் மாளுகின்றார்

பிணிநீக்கச் சென்றவனைக் குத்திக் கீறிப்
பெரு(இ)ராச உறுப்புக்களைத் திருடி விற்று
மணிமணியாய் பொன்சேர்க்கும் நிபுணர் கூட
மனிதனென நிமிர்கின்றான் பெருமை பொங்கக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுணப்பொழுதில் நலைப்பிணமாய் நரனை மாற்றக்
கண்டுளான் போதைதரும் கொடிய தஞ்சைப்
பிணக்குவியல் மீதேறி இதனை விற்றுப்
பெரும்புள்ளி யாகின்றான் உலகு மெச்ச

தான்செய்த குற்றத்தை தேர்ந்தி டாமல்
தண்டனையைப் பெறுகின்றான் ஒருவ னிங்கே
ஏனென்று கேட்பாரும் இல்லா வண்ணம்
எத்தனையோ செய்கின்றா னொருவ னங்கே
தானொருவன் வாழ்வதற்காய்க் கொடுமை பூத்து
தாரணியை ஏப்பமிட்டு வாழு மாந்தர்
ஈனமுற மலிந்துள்ள இந்தக் காலம்
எப்பொழுதும் பொற்காலம் ஆகி டாது

நோக்கங்கள் குறிக்கோள்கள் பிழைத்த தாலே
நுகர்வோனின் பாதிப்பு அதிக மாச்சு
ஆக்கங்கள் தூய்மையினை இழந்த தாலே
அத்தனையும்மனிதனுக்கு முரணாய்ப் போச்சு
ஆக்கங்கள் மனிதனுக்கு முரணாய்ப் போக
அவனேதான் காரணமாய் ஆகி விட்டான்
ஆக்கங்கள் சீர்மையுற வேண்டு மென்றால்
அவனைத்தான் சீர்திருத்தம் செயய வேண்டும்

மண்ணிலே முயற்சித்தால் விளைச்சல் கூடும்
மரத்திலே முயற்சித்தால் பொருட்க ளாகும்
எண்ணிலே முயற்சித்தால் அறிவு கூடும்
இதயத்தில் முயற்சித்தால் மனித னாவான்
கண்ணியம் அவனிடத்தில் வந்து சேரும்
காலடியில் குவிந்துவிடும் உலகம் கூடப்
புண்ணியங்கள் செய்பவனாய் மனித னாவான்
பொற்காலம் அன்றேதான் உதய மாகும்

மனிதர்களின் மண்வாழ்க்கை முடிந்து போனால்
மரணத்தின் பின்னெடிய வாழ்க்கை யுண்டு
புனிதமுடன் உலகத்தில் வாழ்ந்தி ருந்தால்
போகுமிடம் சுவர்க்கத்தின் சோலை யாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனுக்குத் தீமைதரும் செயலைச் செய்தால்
மறுமையிலே நரகவனை வந்து சேரும்
எனும்உறுதி மனிதனிடம் வலுவ டைந்தால்
இறைவனிடம் எக்கணமும் அச்சம் தோன்றும்

இறைபார்வை எப்போதும் எம்மை நோக்கி
இருப்பதனை மனிதஇனம் நம்பு மென்றால்
கறைப்பூக்க செயல்களிலே வேகம் நீக்கி
பண்ணியமாய் ஆயத்தில வணக்கம் செய்து
நிறைகல்வி சற்றிடுவான் தோத(தி)ரம் செய்வான்
நெஞ்சத்தைப் பிறருக்காய்த் திறந்து வைப்பான்
அறச்சிறிய செயலேனும் செய்யும் போது
அவன்பொருத்தம் இல்லையெனில் செய்ய மாட்டான்

இறைவனையே முழுமுதலாய் நம்ப வேண்டும்
எந்நாளும் தவறாமல் வணங்க வேண்டும்
கறைபோக்கக் கல்வியினைக் கற்க வேண்டும்
கணப்பொழுதும் இறை நினைவு மறந்தி டாமல்
நிறைவான தோத்திரங்கள் செய்ய வேண்டும்
நெஞ்சாரப் பிறருக்கு உதவ வேண்டும்
இறைவனுக்காய் இத்தனையும் செய்ய வேண்டும்
இம்மியுமே புகழுக்காய்ச் செய்ய லாகா

சித்தாந்த நீதியிலே இவற்றைக் கூறிச்
செய்வார்கள் என்றெவரும் இருந்தி டாமல்
இத்தகைய வழிமுறைகள் நம்பி டத்தும்
இகத்திலுள்ள மனிதர்கள் எல்லோ ரிடத்தும்
நித்தியமாய் உண்டாகப் பாடு பட்டால்
நிச்சயமாய்ப் பொற்காலம் வந்தே திரும்
அத்தகைய பொற்காலம் அமைய மென்றால்
அழைத்திடுவோம் பொற்காலம் வருக வென்று

திறமைச் சான்றிதழ் பெற்ற கவிதை:
எழுதியவர்: கவிஞர் ஏ. ஸீ. இஸ்மெயில் லெப்பை
சம்மாந்துறை - 3, இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக பொற்காலம்

7

கற்காலம் எனப்படுமோர் காலத்தின் முன்னே
கருவுற்று வளர்ந்திட்ட தமிழ்த்தாயே உன்றன்
பொற்காலம் இதுவென்றும் அதுவென்றும் கூறிப்
புலவர்தாம் வாதிட்ட போதும் நான் ஏலேன்
நற்காலம் எனநானும் நினைக்கின்ற காலம்
நண்ணவிலை இன்றளவும் தாயேஉன் மக்கள்
கற்காலம் என்ன நிலை வாழ்கின்றார் அந்தோ
தலைவிதியோ போகூழோ என்னவெனச் சொல்வோன் 1

காப்பியனார் காலத்தே ஒருவேளை நீயும்
கனகமணி அரியாணையில் வீற்றிருந்து நாளும்
யாப்பிசைவாய் ஆட்சியினைச் செய்திருத்தல் கூடும்
யாழொலியும் குழலொலியும் யாத்திருக்கக் கூடும்
பாப்புனைவார் உன்புகழைப் பாடியுமே நாளும்
பலபரிசு பெற்றிராய் வாழ்ந்திருக்கக் கூடும்
மூப்பிலையா வாழ்க்கையிலே மூழ்கியுமே மக்கள்
முழுநிலவாய் வாழ்ந்தநிலை வாய்த்திருக்கக் கூடும் 2

அல்லவைதாம் செய்யாமல் காக்கின்ற மன்னர்
அன்றிருந்தார் இன்றில்லை சொன்னபடி கேட்கும்
நல்லவராய்ச் சுற்றத்தார் மனைவியொடு மக்கள்
நலமாக வாழ்ந்தார்கள் இன்பமுடன் நல்ல
பல்கலையின் கழகமென வாழ்ந்திட்ட காலம்
பகற்கனவாய் போயிற்றே தமிழகந்தான் இன்று
பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் கொண்ட
பாலைநில மாகியதே பாழ்பட்டுப் பட்டு

காய்நெல்லை அறுத்தேதான் கவளத்தைக் கொண்ட
கற்புநெறி மன்னர்களும் தலறுகண்ட போது
பாய்புலியாய் அறிவுரைத்த பாவலரும் வாழ்ந்தார்
பாரெல்லாம் பொதுவென்ற பண்பாட்டுக் காரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மொழியாய் யாதுமூரே யாவருமே கேளிர்
வழங்கியதும் இந்நாடே இந்நாட்டில் இன்று
காய்மொழியாய்க் கசப்புடனே காரமெலாம் சேர்ந்து
கழறுமொழி நாகரும் கயமைநெறி பேசும்

ஒன்றேதான் குலமென்றும் ஒருவனேதான் தேவன்
உரைத்தவரும் பொதுமைநலம் உயிராகப் பேணிக்
சன்றுக்கும் பால்விட்டுக் கறந்தார்கள் என்றும்
கைநீட்டி வாழாமல் கண்களிலே ஈரம்
நன்றியினை நெஞ்சாக நாவினிலே நேர்மை
நடமாட வாழ்ந்தார்கள் பகைவரெலாம் சேர்ந்து
கொன்றன்ன செய்தாலும் கொத்தடிமை யாகாக்
குன்றாக நின்றார்கள் இன்றில்லை அந்தோ

நீதிநெறி வழுவியதால் நெடுஞ்செழியன் அன்று
நிலைகுலைந்து உயிர்விட்டான் பழிகளையே சொன்ன
மோதுபகை மன்னரைத்தான் கல்சுமக்க வைத்தே
முன்பொறித்தான் இமயத்தில் வில்கொடியைச் சேரன்
ஊதுமலைப் பெருங்கடலில் படைநடத்திச் சென்று
ஒன்னாரை வென்றார்கள் மூவேந்தர் அன்று
சாதிவளர் சாக்காட்டில் தனிவழியே நின்று
தவிக்கின்றார் தமிழினத்தார் சாப்பறையில் மூழ்கி

எல்லோர்க்கும் கொடுத்திடுவாய் என்றேதான் சொல்லும்
ஈரநெஞ்சம் உடையவராய் அன்றவரும் வாழ்ந்தார்
நல்லோர்கும் துன்பத்தை நாட்டாரே தீர்த்தார்
நன்றிதனை மறவாத நயப்புடனே வாழ்ந்தார்
சொல்முறையில் சூதில்லை சொன்னபடி செய்தார்
சொத்துவெறி மூதலான சூழ்ச்சிகளும் இல்லை
பல்வகையில் கூட்டுறவாய் வாழ்ந்திட்ட நாட்டில்
பாழ்மைய நெறியெல்லாம் பாய்ந்ததுவே அந்தோ

குறைவாசக் கொடுக்காமல் கொள்வதிலும் நேர்மை
கொண்டராய் வாழ்ந்தார்கள் கொடைமடமும் பட்டு
நிறைவாக அமைதியுடன் தம்நெறியில் நின்று
நெஞ்சுசக்கு இல்லாமல் நிமிர்ந்தநிலை வாழ்ந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறைவாளை ஒருபோதும் நட்டாரைக் கொல்ல
உருவாமல் பகைவரது செயலறவே சாக
பறையறைந்து பசுக்கூட்டம் பிணிமாந்தர் நீக்கும்
பண்பாட்டுப் போர்முறையைப் பாங்குடனே காத்தார் 8

வேண்டுதல் வேண்டாமல் ஓவியமாய் வாழ்ந்தே
விரிந்தமனம் கனிந்தவுளம் விளங்கிடவே நின்றார்
தூண்டாத மணிவிளக்காய்த் தொண்டுநலம் பேணி
தொட்டவுடன் ஊறுகின்ற பணற்கேணி யாகத்
தீண்டாமை தனைவிலக்கி சேர்ந்தொன்றாய் வாழும்
திசைநோக்கிச் சென்றார்கள் விதைநெல்லைப் போல
மாண்டாலும் புகழுருவாய் வாழ்ந்தார்கள் அந்தோ
வடிவிழந்து பொலிவிழந்து வாழுநிலை யாக 9

மண்ணிதிலே நல்லவண்ணம் வாழ்ந்திடலாம் என்றே
முழக்காடி நின்றார்கள் இரக்கமெனும் ஊற்றைக்
கண்ணதிலே தேக்கியுமே கனிவுடனே பேசிக்
காலமெலா விருந்தினர்தம் வரவினையே நோக்கித்
திண்ணையினை அமைத்தார்கள் சத்திரங்கள் கட்டித்
தெருமுனையில் பானகம்நீர் செய்தளித்தார் மேலும்
பண்ணைவளர் விலங்குகளும் பசிதாகம் தீர
பற்பலவாம் நீர்த்தொட்டி அமைத்தன்று காத்தார் 10

வேறு

மூவேந்தர் தம்முள்ளே முரணிக் கொண்டு
முழுதாக அழிந்தார்கள் வேற்று நாட்டார்
பாவேந்து ஒவி நயம்போல் விரைத்து வந்து
படைவிரித்தார் அடிமையாக இந்த நாடு
சாவேந்து துன்பங்கள் வருத்தி நிற்கச்
சாக்காட்டுப் பாதையிலே நின்றபோது
நாவேந்து புலவரெலாம் நடையை மாற்றி
நமக்கென்ன என்றேதான் இருந்து விட்டார் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தமிழகந்தான் இருந்த போது
இங்கு வந்த பரங்கியராம் கொளையைக் கூட்டம்
எவ்வாறோ ஆட்சியினைப் பிடித்துக் கொண்டார்
ஏவலராய்த் தமிழரெலாம் ஆகி நின்று
ஒவ்வாத மொழிபேசி நத்தி வாழும்
ஓந்திகளாய் நிறம்மாறி உலர்ந்து போனார்
செவ்வாழைக் கனிமரந்தான் கள்ளி யான
சிறுமையது நேர்ந்ததுவே நரிகள் வாழ 12

பொறுப்பாக வேலைசெய்யும் கூட்ட மென்றும்
போராட்டம் செய்யாத கூட்ட மென்றும்
சிறப்பான குணமுடையார் தமிழ ரென்றும்
சிக்கலற்ற இனமென்றும் போற்றிக் கூறி
விரைப்பான நடைபயிலும் ஆங்கி லேயர்
விரைவாக இலங்கைமுதல் நாட்டுக் கெல்லாம்
முறைப்பாடு கொண்டவராய் நெட்டித் தள்ள
மூட்டைநெல் சிதறிடவே முடங்கிப் போனார் 13

தேயிலையின் தோட்டத்தில் கரும்புக் காட்டில்
தென்னைமரச் சோலைகளில் குருதி சிந்தி
வாயில்லா ஊமைகளாய் வாழ்ந்து நின்ற
வரலாறு கஞ்சியின்றிப் படுக்கக் கூடப்
பாயில்லா வறுமைநிலை நோய்க ளாலே
பாடையதன் மீதேறிப் போன தெல்லாம்
தாயில்லா நிலைதானே சொந்த நாடு
தானடிமைப் பட்டதினால் என்று கூட 14

எண்ணாது வாழ்ந்தவர்கள் எண்ணிப் பார்க்கும்
எழுச்சிநிலை எவ்வாறோ வந்த தாலே
உண்ணாதே உறங்காதே என்று கூவி
உறவுக்கை நீட்டியுமே ஒன்றாய் ஆகி
மண்ணாத சேற்றையெல்லாம் கழுவிக் கொண்டு
மடங்காத மறவரென மாற்றங் கண்டு
திண்ணியராய் விடுதலையே நோக்க மாக
திரண்டார்கள் தமிழரெலாம் இமய மாக 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுக்கிலைத்த மக்களது ஆர்வந் தன்னை
அடக்கியாள நினைக்கின்ற அகந்தை யாளர்
துமுக்கிகள்தாம் என்செய்யும் குண்டு போட்டுத்
துளைத்தாலும் தூக்குமரம் செய்து வைத்துத்
தமுக்கடித்துப் பறைசாற்றி நாட்டை யெல்லாம்
தரைமட்டம் ஆக்கியுமே கொடுமை யாளர்
உமியாக்க நினைத்தாலும் உரிமை கேட்கும்
உணர்வுகளைக் கொன்றொழிக்க இயலா தன்றோ 16

ஏதிலியாய்த் தமிழரெலாம் அங்கே யங்கே
இறந்துபட நேர்ந்தாலும் இரந்து நிற்கும்
நாதியிலா நடைப்பிணமாய்க் கைகள் நீட்டி
நடைபயில நேர்ந்தாலும் சிறைக்குள் போட்டு
வேதனைகள் செய்தாலும் கையைக் காலை
வெட்டியுமே போட்டாலும் உரிமை கேட்கும்
சாதனையை முடிக்காமல் சாக மாட்டார்
சதிவலையை முறிக்காமல் போக மாட்டார் 17

கற்பழிந்து போனாலும் சிறுவர்க் கெல்லாம்
கல்வியிலை யென்றாலும் ஏசிப் பேசிச்
சொற்பழித்து நின்றாலும் தூய நெஞ்சம்
சுக்குநூறாய்ப் பொடிப்பொடியாய் தூவும் மாவாய்க்
கற்பிளவாய்த் தலைதன்னை சிதற வைத்துக்
கண்குத்தி நின்றாலும் உரிமை காணும்
சொற்பதத்தை நாடாமல் தூங்க மாட்டார்
சூழ்ச்சிகளை வெல்லாமல் சாக மாட்டார் 18

ஆறிலும் சாவென்றே அறிந்து விட்டார்
அனாதைகள் தாமென்றே உணர்ந்து விட்டார்
கூறாகச் சதைவெட்டிப் போட்ட போதும்
குமுறாத மனமதனைக் கொண்டு விட்டார்
நாராக வாழ்ந்திடவே எண்ணங் கொண்டார்
நரிகளுக்கோ அஞ்சிடுவார் தமிழைக் காக்கும்
வேராக ஆகிடவே விருப்பங் கொண்டார்
விடுதலையை மறந்துவிட்டா வீடு செல்வார் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபத்து நான்குகோடி மக்கள் எங்கள்
அருந்தமிழின் வழிவந்த உயிர்கள் என்றே
ஒருபத்துக் கோடிப்போர் போனா லென்ன
உரிமைக்காய் உயிர்விட்டால் குறைந்தா போகும்
செருப்பறைதான் ஒலித்திடவே சிறுவன தன்னைச்
செருமுனைக்கு அனுப்பியவள் வாழ்ந்த நாட்டில்
உருப்படவே முடியாதா தமிழைக் காக்கும்
உரிமைக்காய் உயிர்விடுவோம் சாவே வாவா 20

வேறு

உலகில் உள்ள நாடுகள்போல்
உரிமை யுள்ள குடியரசாய்
அலகில் கல்வி பயிலுரிமை
அச்சம் இல்லாப் பேச்சுரிமை
உலவும் உரிமை எழுத்துரிமை
ஒன்றி வாழும் குடியுரிமை
நிலவும தமிழர் பொற்கால
நிலையே வருக வருகவே! 21

கல்வி தன்னைத் தாய்மொழியில்
கற்கும் உரிமை நலவழியில்
செல்வம் சேர்க்கும் செயலுரிமை
திருடர் இல்லாப் பொதுவுடைமை
எல்லாச் சொத்தும் நாட்டுடைமை
இரப்பார் இல்லாத் தனியுடைமை
வல்ல தமிழர் பொற்கால
வாழ்வு வருக வருகவே! 22

பிறப்பார் எல்லாம் நாட்டுடைமை
பேணி வளர்க்கும் அரசுடைமை
இறப்பாய் வேலை தருவுடைமை
இக்கல் இல்லர் வாழ்வுரிமை
கறப்பார் இல்லாப் பாலுடைமை
கயமை இல்லா நெஞ்சுடைமை
அரப்பாத் தமிழர் பொற்கால
அழகே வருக வருகவே! 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா நாடும் விருந்தாக
ஏற்றுக் கொள்ளும் வகையினிலே
நெல்லும் நீரும் தந்துதவும்
நிலையும் வளமும் பெருநிலையும்
கொல்லும் வறுமைப் பேய்தனையே
கொல்லும் வலியும் பயிர்வகையின்
சொல்லேர் தமிழர் பொற்காலச்
சுடரே வருக வருகவே! 24

சாதி சமயச் சண்டைகளும்
சடங்கு நெறியின் சாக்காடும்
மோதும் பகையாம் திண்டாமை
முரண்கள் யாவும் முடிந்திடவே
யாதும் இனிமை யாப்பாக
யாண்டும் அன்பே உறவாக
ஓதும் தமிழர் பொற்கால
உறவே வருக வருகவே! 25

கல்லும் மண்ணும் தோன்றாத
காலந் தனில்நீ உருவாகிச்
சொல்லும் மொழிகள் அனைத்தையும்
சூலாய் ஏற்றுக் கருவுயிர்த்து
வில்லும் மீனும் புலிக்கொடியும்
விளங்க வைத்த கன்னியெனச்
சொல்லும் தமிழின் பொற்காலச்
செல்லே வருக வருகவே! 26

எழுதும் எழுத்தும் வழக்காறும்
என்று மொன்றாய் இயங்கிவரும்
அழுத பிள்ளை வாயடங்கும்
அறத்துப் பாலின் தாலாட்டும்
தொழுத கைக்கு வலிமைதரும்
தொட்ட கையை மணமாக்கும்
விழுதாந் தமிழின் பொற்கால
வித்தே வருக வருகவே! 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் உள்ள தமிழென்றே
இயம்பும் வகையில் சொற்கண்டு
நன்றுந் தீதும் சொல்லாலே
நடக்க வைத்துத் திசைகளைப்
பொன்றும் படியாய் இலையாக்கும்
பொன்னே மணியே கற்கண்டே
என்றுந் தமிழின் பொற்கால
இசையே வருக வருகவே! 28

தன்னே ரிலாத தமிழென்றே
தாயாய் வந்தாய் சங்கத்தின்
பொன்னேர் மூட்டிப் புலவரெலாம்
போற்றிப் புகழப் பின்வந்தார்
மின்னேர் குறளுக் காப்பியமும்
மீட்டி வைத்த கருவூலப்
பொன்னேர் தமிழின் பொற்காலப்
பொலிவே வருக வருகவே! 29

உலக வழக்கே அழியாத
உயிரே உயிரின் ஓவியமே
நிலவே கலப்பை ஏற்காத
நிலையே ஒளியின் நிறைகுடமே
குலவு தென்றல் குற்றாலக்
கொடையின் மணமே சந்தனமே
உலவு தமிழின் பொற்கால
உயிரே வருக வருகவே! 30

இறைமைச் சான்றிதழ் பெற்ற கவிதை:

எழுதியவர்: கவிஞர் தமிழப்பன் அவர்கள்
அண்ணாநகர், சென்னை 40.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வருக பொற்காலம்"

8

1. முகப்பு

விருத்தம்

ஆதிவரு மூலமெனும் இறைவா நீயே
அண்டபகி ரண்டங்கள் அனைத்துந் தந்தாய்
ஒதியுணர் சான்றோர்கள் கிருத திரேத
உற்றவுயர் துவாபர கலியா மென்று
மேதினியில் நான்குயுகம் வகுத்து விட்டார்
மேலுரைத்த முதன்மூன்றும் விரைந்து செல்ல
மோதுதுயர்க் கலிகாலம் எமையி ருத்தி
முன்னவா விட்டனையே மொழியக் கேண்மோ.

வெற்பாரு புயவேந்தன் நளனை யன்று
லெங்கானம் அலைவித்து விட்ட அந்த
மற்பாரு கலிபுருடன் ஆட்சி தன்னில்
மக்கள் யாம் வாழ்ந்துகொண்டு மனமே யாறாப்
பொற்காலம் வருகவெனப் புலம்பி னாலும்
பூத்தாலுங் காயாத மரம்போல் நின்று
தற்காலங் கழிவதுபோற் தோற்று தம்மா
சாதிப்போம் பகீரதனின் சரிதை யோர்ந்தே.

2. மொழிப்பு

பொது

ஒன்றுதான் தெய்வமென்றார்; குலமு மென்றார்
ஊரெல்லாம் நமதூரே; உள்ளோ ரெல்லாம்
நன்றாக கேளிரென்றார்; எல்லோ ரும்மே
நன்மனதா யின்புற்று வாழ்வோ மென்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றின்மேற் தீபமெனும் நீதிமான்கள்
குறிப்பிட்ட அறவுரைகள் — குலவுஞ் சான்றோர்
மூன்வைக்கும் அறிவுரைகள் பொன்போற் கொண்டால்
முழுமதிபோற் றுலங்கும்பொற் காலந் தானே.

இந்தாழி சூழிலங்கை தென்னா பிரிக்கா
இலகும்ஆர் மோனியா தருக்கி ஈராக்
பந்தாடும் அயர்லாந்து பொல் சீனியா
பாங்கான காசுமீர்நை சீர்யா போன்ற
நந்தாத் விளக்கனைய நாடு களிலே
நடனமிடும் பிரிவினைகள் யுத்தத் தாலே
சிந்தாத குருதிவெள்ளஞ் சிந்தக் கண்டோம்
சிறுமையெலாம் நீக்கும்பொற் காலம் வேண்டும்.

இனபேத மதபேத சாதி பேத
இருபாலில் நிலைப்பட்ட எண்ண பேத
கனமான பக்ளேனும் சற்றோர் மற்றோர்
கைநிதியம் உளவோர்கள இல்லோ ரென்றா
மனபேதம் உருவாக்குஞ் செயல்கள் மாற்றி
மண்ணுலகில் ''இதுமுதலாம் உலகம்; அதுதான்
தனியான மூன்றாமோர் உலக'' மென்றா
தன்மான மிலாக்கருக்கள் தணிய வேண்டும்

மேன்மைதரும் ஆன்மீக வளர்ச்சி — மேலாம்
விலைபெற்ற சமத்துவத்தின் பொருளா தாரம்
தேன்போலும் இனிமைமிகு சகோத ரத்துவம்
தேசொளிரும் அரசியலிற் றிறம்பா அறங்கள்
வானொளிரு மதியொத்த தலைமை — அன்பு
மாறாத அறிவுடைமை அனைத்தும் வாழும்
மானிடர்க ளனைவருக்கும் 'பொதுவா' மென்ற
மனப்பான்மை யுருவாகி வளர வேண்டும்

மூதுலகிற் தனித்தியங்கும் நாடே யொன்று
முழுமையறு பொற்காலப் பயனைத் துய்த்தல்
சாதுரிய மானவொரு செயலு மன்று;
சாத்தியமும் ஆகாது; தகும்பிர தேச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியான வளர்ச்சியொன்றே இனிதேற் பட்டு
நீங்கார மாயுலகில் ஒலிக்க வேண்டும்
ஓதியிதை நிதிமோதி உலக மக்கள்
உளப்பாங்கை வளர்க்குபொற் காலம் வேண்டும்;

2. சிறப்பு

விருத்தம் — வேறு

நாடு — அரசியல்

'மன்னவன் உயிரே' யென்னும் மலர்தலை யுலகு தன்னில்
அன்னவன் தலறி ழைத்தால் அவலமுங் கவலை யாவுந்
துன்னிடும் சுதந்தி ரத்தின் தூய்மையும் ஆட்டங் கொளளும்;
பன்னக வாயிற் தேராப் பாடுபோல் நாடும் ஆகும்.

வேறு

சதுர்மறைகள் வெறுத்தொதுக்கும் ஆசை முன்றில்
தலையாய மண்ணாசைச் சதுராட் டத்தில்
எதுதவறென் றெண்ணாமல் இடித்துக் கூறும்
எழிலமைச்சர் மதிகேளா இறுமாப் போடு
பொதுமறைசொல் அரசியலைப் புறக்க ணித்துப்
போனபக்கந் திருப்பிவிட்டாற் பார்வை தன்னை
விதியதுவே பொறுத்திருந்து புரிவான் வேலை
வேந்துதுரி யோதனனே போந்த சான்று

முற்றேறு கிருதயுகம் முதலாய் வந்த
முடிமன்னர் மந்தாதா மனுவி னோடு
நற்றேறு கடலடிடத்த ராமச் சந்திரன்
நடுநீதி தவறாத மன்ன ரெல்லாம்
அற்றோ மண்ணாசைதனை வெறுத்தே யாண்டார்
அவரோடும் போகாத இந்த மண்ணை
வற்றேறு குடியரசர் சொந்த மென்னா
மற்றெவர்க்கு முரிமையெனும் மதிப்பு வேண்டும்.

இனங்கண்டு கொள்ளாத இதய மோடு
எழுகின்ற சந்தேகம் — இதமா யெங்குந்
தினங் கொண்டு திரிபேச்சிற பிசுபி சுப்புச்
சேவலது கூவுமுன்னர் அதனை மாற்றால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனங்கொண்ட வாறுபுரி மாரீ சங்கள்
மண்ணாளும் மன்னவர்க்கு வான்போ லாகிக்
கனங்கொண்ட மக்களது எண்ணத் தியில்
கடைந்தெடுத்த நெய்வார்த்த கதியாய் முடியும்.

2 மொழி — இனம் — சமூகம்

வேறு

பலவினமும் பன்மொழியும் பரந்தவொரு நாட்டில்
பரஸ்பரம்நற் புரிந்துணர்வும் பண்பாரும் ஒருமை
இலகிடவும் வாழ்தல்கடன் ; என்றுமிலை தானே
இறவாத பொன்னுலகம் எழுபாரி சாத
மலர்போலக் கமகமக்கும்: மனமவேறு பட்டால்
மண்டுதழல் மின்டியெரி மயானமய மாக்கும்
சிலரீதனை யறிந்திருந்தும் அறியார்போல் வாழ்ந்து
சேற்றினிலே புரண்டாடி மாற்றுவிடும் பொற்காலம்

3 கல்வி — கலை — தொழில்

வேறு

''தலைகொள்ளாப் பிரச்சினைகள் வந்த போதுஞ்
சமாளிக்குந் திறனதுவே கல்வி'' யென்னும்
தலைநிறந்த கூற்றினுக்கே சமாதி கட்டிச்
சான்றாண்மை நற்சேவைத் தலைமை பூண்ட
விலைமதிக்க முடியாத பதவி களையே
விழலுக்கி றைப்பதினால் விரக்தி யுண்டாம்;
கலைபகளார் கழுத்தினிலுங் கத்தி வைக்குங்
கலாத்தை மாற்றும்அபாற் காலம் வேண்டும்

வேறு

அவரவர் மொழியுங் கலையும் அவரவர் கண்க ளாகும்;
எவரெவர் வளர்க்கின் றாரோ ஏற்றமே தோற்றும் என்றும்;
புவனமே மதித்து வாழும் புலவர்கள் — சங்கம் — நூல்கள்
தவமதின் பயனால் வந்தால் தழைத்தவோர் பொற்கா லந்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளமே தமிழ்த்தாய் பள்ளி கொண்டிட உயர்ந்த கம்பன்;
தெள்ளிய முப்பா லூட்டிச் செகத்தினை புரந்த தேவர்;
துள்ளுபா வடியிற் றேனைத் தோய்த்தகோ வடிகள் நெஞ்சை
அள்ளுபா ரதியைப் போன்றோர் அவதரி காலம் வேண்டும்

4 தொழில்

உழவனே யில்லை யென்றால் உலகமே பசியால் வாழும்
பழகுகைத் தொழிலால் உலகின் பருவரல் பறந்தே யோடும்
அழகுநூல் நெய்தல் போன்ற ஆயிரங் கோடியான
தொழில்மிகு வுலகந் தன்னிற் தோன்றும்பொற் காலந் தானே.

வேறு

பீடையது சுமந்தளவும் பின்முன்னே தள்ளப்
பிள்ளைதனைச் சுமந்திருக்கும் பெருவயிறு நோக்க
கூடையதை யேந்துதிரு மேனியது குறுக்க
குறிஞ்சிநிலக் குமரனையே கும்பிட்டு வேண்டி
ஆடையது தளர்ந்திடவே அசைந்தசைந்து சென்று
ஆருயிரை நாட்டுக்கே அர்ப்பணித்துத் தேகம்
ஓடாகிப் போனதொழி லாளரது வாழ்வு
உயர்ந்திடவே பொற்காலம் ஓடியிங்கே வருக.

5 அனைவரும் சம உரிமை

உலகெங்கும் மனிதனது உரிமையெணுங் குரலை
ஓயாம லெழுப்பியொரு சட்டமுமே யாக்கி
நிலவுலகி வதையோட்டுச் சுரைக்காய்போல் மாற்றி
நிற்பதுதான் கற்பனையுங் கனவுபோற் கண்டோம்
சலனமுற்று வாழுகின்ற வாழ்வுமோர் வாழ்வோ?
சமஉரிமை பெற்றினிது வாழுகின்ற காலம்
நிலமிசையி லுதிக்கினொரு பொற்காலம் ஆகும்
நிரந்தரமும் அதற்காக இரந்திடுவோம் நின்றே.

பூவிலயன் நரிவிலுயர் பொருப்பிலரன் பாகம்
புயல்வண்ணன் திருமார்பிற் போந்துறையும் வானத்
தேவர்குல மாதர்கள்போற் செகத்தினிலே வாழுஞ்
சேயிழையார் தமையொடுக்கி யடக்கிடுமோர் காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவில்லாத துணைபுரிய உலகினிலே வந்த
உயர்ஐ நா உரிமைவளர் ஒப்பற்ற சங்கம்
பாவிகளோ எனவெண்ணிப் பெண்ணுரிமை சேர்க்காப்
படுபாவம் பறந்தோடிப் பொற்காலம் வருக.

கறுப்பரொடு வெள்ளையர்க ளென்றுபிரித் தோதிக்
கண்கட்டு வித்தைகளைக் காட்டிச்சம நீதிப்
பொறுப்புணரா அடிமைநிலைப் பூசல்களை வளர்த்துப்
புவியெல்லும் பொற்றருவைப் புழுவரிக்கச் செய்யும்
வெறுப்பான செயல்கள்தனை மேவுலிங்கன் காந்தி
வேரோடு களைந்தெறிய விரைந்தார்க ளுன்னாள்
திறப்புமக்கள் கரங்களிலே தினமிருக்கும் போது
சிறந்தபொற் காலமது தேடிவரும் நாட்டில்

6 உலக சமாதானம் - அமைதி

வேறு

வானிருந்து வந்தசமா தானந் தன்னை
வளர்க்கவென மன்பாப்பு மகாத்து மாக்கள்
ஊனிருந்த வுயிர்போல மதித்துப் போற்றி
உலகமெலா மனுப்புகின்ற உயர்தூ தினுக்கு
தேனிருந்த அமைதியெனுங் கனிகள் கொண்டு
திசையளக்கும் பறவைகட்குஞ் சிறகொ டித்து
'நான்' இருந்தே அரசோச்சுங் கலித விர்க்கின்
நல்லதொரு பொற்காலம் நாடு மன்றோ

7 மாணிக்கப் பொற்காலம்

வேறு

வேலையில்லாத் திண்டாட்டம் மிகுந்தொளிரு காலம்
வேற்றுவரா டலைந்தலைந்து 'நாடோடி' - அகதி
ஞாலமெலாம் வெறுத்தொதுக்கும் 'அனாதை' யெனும் பட்டம்
தல்லோரும் பெற்றிங்கே நலியுமொரு காலம்
வாலறிவன் விதித்தவொரு சாபத்தின் விளைவாய்
மடிப்பசைசை தானேந்தி மாய்ந்திடுமோர் காலம்
போலவொரு காலமிங்கே யாட்கொளவே கண்டோம்
பொறுமையொடு காத்திருப்போம் பொற்காலம் வேண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனபயம் ஐந்துமிலா அரசோச்சுங் காலம்
ஆருக்கும் அடிமையிலா அன்பூட்டுங் காலம்
தேனமுத விடுதலைத்தீந் தென்றலுலாக் காலம்
தினையனவுஞ் சாதிமதத் தீபரவாக் காலம்
வானவிடி போலதிருஞ் சீனவெடி யில்லா
மனிதகுல மொன்றென்னும் புனிதகொடிக் காலம்
மானமொடு மரியாதை தானதவக் காலம்
மாணிக்கப் பொற்காலம் மலிழ்ந்தோடி வருக.

3. முடிப்பு

வேறு

முன்னீர்ப்ப ழந்தீவு பன்னீரா யிரமும்
மூழ்டிவே கடல்கோளால் முதுசொம் ஆய்ப்
பொன்னீழ வளநாட்டைப் பெற்றோம் அதனைப்
போசித்த மூவினமும் 'பிரிவு நோயாம்'
சன்னிகண்டு சளிமூற்று தருணம் பார்த்தே
சனிபகவான் போர்முனையிற் தள்ளி விட்டான்
முன்னிருந்த பொற்காலம் மீண்டும் வந்து
முழுமதிபோ லொளிகொடுக்கும் முயற்சி பூண்மின்

நல்லார்க்குத் தம்மூரென் றூரே யில்லா
ஞானத்தேர் செலுத்துதமிழ்ச் சங்கங்க ளட்டி
எல்லார்க்கும் பொதுவென்றே வைத்த போட்டி
இரவியொளி பொதுவென்னும் இலக்கைக் காட்டும்
கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பை யூட்டும்
கற்பகநா டொத்தவொரு வுலகங் கண்டு
சொல்லாருந் தமிழருமச் சுகத்தின் வாரி
தோய்ந்திடுமோர் பொற்காலம் வருக மாதோ.

திறமைச் சான்றிதழ் பெற்ற கவிதை.

எழுதியவர்:- புலவர் க. த. ஞானப்பிரகாசம் அவர்கள்.
கொடிகாமம், இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக பொற்காலம்

9

''மண்டுமன்பில் கொள்வீர் மனம்''

கதிர்காமக் கந்தன் கருணையினால் நெஞ்சில்
உதிர் செய் கவிதை யினை உங்கள் - மதிப்புமிகு
பார்வைக் கனுப்புகிறேன் பண்புளத்தீர் ஏற்றருளிச்
சேர்த்த(ல்) அறிவிப்பீர் தேர்ந்து:

தங்கத் தமிழ் நேசன் தர்விகையில் நான்கண்ட
தங்கள் விளம்பரத்தின் தன்மதிப்பால் - உங்கள்
திருமுன்னே வைக்கிறேன் செந்தமிழ் வெண்பா
வருமுன்பொற் காலத்தை வைத்து:

மதிபுனை ஈசன் தன் மைந்தனின் நல்லூர்க்
கதிதரும் கந்தன் கழலிணைப் - பதிகத்தால்
பாடிப் பணிகிறேன் பண்புதமிழ்ச் சங்கத்தார
கூடிநலன் கொள்வர் குளிர்ந்து:

தோந்தமிழ்ச் சங்கத் திறனார் பெருமக்கள்
ஆர்த்த திருவடியி(ல்) அஞ்சலித்தே - சேர்த்திடும்
செண்ணடைய பாடல் சிறப்படைய வேண்டுகிறேன்
மண்டுமன்பில் கொள்வீர் மனம்.

மனதா(ல்) உடலினால் வாக்கினால் பாடல்
எனதென்ற சொல்லுறுதி ஏற்று - இனத்தமிழின்
தேர் கொழும்பு நிற்கும் நிலைதத தமிழ்ச்சங்க
ஆர்வலர்கள் கொள்ள(ல்) அறம்.

அறனறிந்த சீர்கொழும்பு ஆன்றதமிழ்ச் சங்கத்
திறனறிந்து போட்டிப்பா செய்தே - கரங்குவித்தே
அஞ்சலிலே சேர்த்தே(ன்) அடியேன் நான், இக்குவனம்
பஞ்சமனய நெஞ்சைப் பதித்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவுத் தபாலில் பயணம்செய் கூடு
கதியாக வந்தடைந்த காலம் - கதிரையோன்
நல்லருளைக் கூட்டியே நானறியச் செய்திடுக
வல்லவர் நீர் என்னை மதித்து.

''பொற்கால மென்னும் புகழ்''

பொன்னகராம் நற்பொழில் சூழ் போற்றும் கொழும்புவில்
கன்னல் தமிழ்ச்சங்கம் காணுகின்ற - மன்னுபுகழ்ப்
பொன்விழா வெற்றியுறப் பூந்தமிழ்த் தாய் பாதமலர்
என் நெஞ்சிற் கொண்டுன் னினைத்து.

சங்கத்திற்கு வாழ்த்து

வருகபொற் காலமெனும் வண்ணத் தலைப்பில்
தருகவி தைகளைத் தங்கன் உருகுதமிழ்த்
தாய்மொயில் என்ற தவக்கொழும்புச் சங்கத்தார்
வாய்மைக்கு நானுரைத்தேன் வாழ்த்து.

கவிதைப் பொருள் ''வருக பொற்காலம்''

வாழ்தமிழைத் தேயா வளர்பிறை போற் பேணிவரும்
தாழ்வறியாச் சீர் கொழும்புத் தண்டமிழர் - ஊழ்வகற்றி
நீயெமப் பொற்கால நித்திலமே நீவருக
பாடு பொருள் நீவருகப் பார்த்து.

பார்த்தே பழிசுத்தும் பணிபற்றோர் நீச்செயல்கள்
தீரத் திருமருவச் செய்திடவே - ஆர்த்தே
வருகபொற் காலமே வாழ்வியலில் இன்பந்
தருகபொற் காலம்நீ தான்

தானென்னும் நெஞ்சத் தருக்குற்ற வினர்தம்
தேனென்னும் ஆணவத்தின் நேசத்தை — மீனென்றே
நீரகற்றிப் பொட்டல் நெடுந்தரையி லீசற்கே
பாரகப்பொற் காலம் நீ பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார் வியக்கக் கோ லோச்சிப் பண்பாட்டில் மிக்குயர்ந்த
சீர் பொ லிந்த தொல்லிலங்கை தேசுபெற — ஏர்பொலியும்
பேரமைதி பொங்கிப் பெருவாழ்வு தாவருக
நேர்நிற்கும் பொற் காலம் நீ.

நீளுலகின் சீர்வதன நெற்றித் திலகமென
நாளுமெமை ஈர்க்கும் நனியிலங்கை — ஆளுகையும்
தொல்லை தொடராது நீங்கிடவே இவ்வுலகில்
வல்லபொற் காலமே வா

வா வா வருகபொற் காலமெனும் வாழ்வே நீ
தா தா துயவுடனே தன்னிறைவை — நீதாவா
சிந்தை தெளிவுபெறத் தேரேறி வாவருக
விந்தைபொற் காலம்நீ மேல்.

மேலென்றும் கீழென்றும் வேற்றுமைகள் காணாத
பாலென்னும் உள்ளப் பசுந்தமிழர் — நூலென்னும்
முப்பால் வழிநிற்க முன்வருக பொற்காலம்
எப்போது (ம்) என்று (ம்) இசைந்து:

இசைபட வாழ்ந்துயர்ந்த இன்ப இலங்கை
வசைபட நின்றிடுதல் மாண்போ — அசைந்தோடி
பூப்போல வாவருக பொற்காலத் தெய்வமே
பாப்புனைந்தேன் உன்னைப் பணிந்து.

பணிவன்பில் மிக்குயர்ந்த பைந்தமிழர் கட்டம்
அணியிழந் (து) அல்லலெனு (ம்) ஆறாப் — பிணிவீழல்
நன்றோ விலக்க நயனுடைப் பொற்காலம்
இன்றே வருக இணைந்து.

இணையில்லாப் பண்பாட்டி (ல்) ஏறனைய நாங்கள்
பிணைபட்டுக் கட்டுண்டு பெற்ற — கணைதைத்த
நெஞ்சாகி நிற்கும் நிலைமாற்ற நீவருக
செஞ்சொற்பொற் காலமெனும் சீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரார் இலங்கைச் சிறப்பெல்லாம் மேலோங்கி
நேரார் வளம்பெருகி நீடுநிற்க — ஏரார்
இலங்கை இளந்தமிழர் இன்னல்கள் நீங்க
வலம்வருக பொற்கால வாழ்வு

வாழ்வின் விளிம்பில் மாறாக் களங்கமுற்றுத்
தாழ்வு நிலையுற்ற தாய்த்தமிழர் — ஊழ்வலியை
வென்று வளம்பெற்று மேன்மையுற நீவருக
நன்றுபொற் காலமெனும் நாள்.

நாளெல்லாம் பாடுபட்டு நாட்டின் வளம்பெருகத்
தோளெல்லாம் தேயத் தொடருழைப்பை — மாளாதே
தந்த தமிழினம் தானுயர வேவருக
முந்துபொற் காலமெனும் மூச்சு

மூச்செல்லாம் சீரிலங்கை முன்னேற்றம் ஒன்றே
பேச்சொழித்துப் பாடுபட்ட பீடுநிறை — பாய்ச்சுமொளி
வீசுதமிழ் மக்களினம் வேண்டியவை பெற்றுயரத்
தேசுபொற் காலம்வா சேர்ந்து.

சோந்துழைத்துத் தென்னிலங்கை செம்மையுற நெற்றிநீர்
போற்தெழுவே பாடுபட்ட பெட்புநிறை — தோர்ந்ததிரு
கோணமலை வாழ்தமிழர் கோலமுற நீவருகக்
காணபொற் காலமெனும் கா.

காமலிந்த தாயிலங்கை கண்மணிகள் வாழ்வியலில்
தீமலிந்து காணுவி ன்ன தேய்ந்தழிய — நா மலிந்த
பாமாலை சூட்டும்நற் பாவலர்கள் முன்வருகப்
பூமாலைப் பொற்காலப் பூண்.

பூண்கலனும் வேண்டார் புனைவதையும் வேண்டிலரே
காண்பதெல்லாம் நாட்டின் கவின்வளமே — மாண்புமிகு
வெற்றி நிறைதமிழர் வீறுபெற நீவருக
பொற்கால மென்னும் புகழ்.

புகழ்படைத்த மூவேந்தர் போற்றி வளர்த்த
இகழழித்த ஏற்றுதமிழ் என்னும் — திகழ்பெருமை
கொண்ட இலங்கைக் குணத்தமிழர் வாழ்வுயர
மண்டுபொற் காலமே வா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாதகல வம்பகல வஞ்சினமும் தானகலத்
தீதகலப் போரின் தினவகலக் — கோதகல
நீவருக பொற்கால நீதியே நிம்மதியைத்
தாதருக தஞ்சமுன் தான்.

தாளிணைகள் தஞ்சமெனத் தாய்த்தமிழே தண்டனிட்டேன்
கேளிர் நிறையிலங்கை கெக்கலிக்க — யாளியென
நின்றெழுந்து நேர்மை நிலையுயர்த்தி நீவருக
மின்னுபொற் காலமே மீண்டு.

மீண்டும் பழையநிலை மேவி யிலங்கைத்தாய்
நீண்ட வரலாற்றின் நேர்மையிலே — தூண்டும்
மகிழ்வுணர்வு கொண்டே மதியொளிபோல் வீசி
முகிழ்த்திடுக பொற்காலம் முன்.

முன்வருக பொற்கால மூவாத் தமிழார்தம்
தன்பெருமை சாற்றத் தகவுறவே — பின்செல்லா
முன்வைத்த கால்கள் முழுவேக முன்னேற
நன்நோக்கை நாட நயந்து

நயன்மிக்க நல்வளத்து நல்லிலங்கை நாடு
பயன்மிக்க ஒற்றுமையைப் பற்றிச் — செயல்மிக்க
நல்லுழைப்பைத் தந்து நரிச்செயலர் போக்கழிக்க
வெல்லுபொற் காலத்தை வேண்டு

வேண்டும் திறனுண்டு வேறாம் தொழிலுண்டு
தூண்டும் பலவளத்தின் தோற்றமுண்டு — யாண்டும்
கோயிலாம் கொப்பரை சேர்தெய்வக் கோலமுண்டு
தேயிலைத் தோட்டமுண்டு தேர்.

தேர்ந்து வருகவே சீரான பொற்காலம்
நேர்ந்த பழிவிலக நிம்மதியர்ய்ச் — சேர்கதியில்
பாடினேன் பொற்காலப் பல்லவியைச் செல்விசையில்
நாடிவரும் நற்காலம் நன்கு.

நன்கு செழிப்புற்ற நாடாகி ஏற்றுமதிப்
பண்மடங்கு கொண்டு பளிச்சிட்ட — தென்னிலங்கை
செல்வளம மீண்டும் சிறக்க வருகவே
நல்லவளப் பொற்கால நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள்தரும் வெற்றியினை நாமெல்லாம் கொண்டாடி
நீள்புகழில் நேர்வுற்றுச் சீரிலங்கித் — தள்பரப்பும்
வெற்றி நிலைக்க விரைந்து வருகவே
பொற்காலம் என்னும்நற் போது.

போதுகின்ற பொன்மனத்துப் பொற்புத் தமிழினத்தை
மோதுகின்ற அல்லல் முனைமழுங்க — ஓதுகின்றோம்
ஒங்குதமிழ்த் தாய்ப்பதிகம் உள்ளன்பால் நீவருக
திங்குதவிர் பொற்காலத் தேர்.

தேரோடு வீதியிலே தெய்வமென நீவருகச்
சீரோடு பொற்காலச் சிற்பமே — பாரோடு
சீரிலங்கை நாடு சிறப்பெய்தத் தான்வருக
மாறியபொற் காலமெனும் வாழ்வு

பாராட்டுச் சான்றிதழ் பெற்ற கவிதை
எழுதியவர்:- கவிஞர் வி. இக்குவனம் அவர்கள்
சிங்கப்பூர் 1128.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக பொற்காலம்

10

வளம்கொழித்த வடபுலத்தி லிப்போ தோபல்
குளமேரி வறள்குட்டை கூவுங்க ளேயுண்டு
உளங்கொதித்தெம் உமிழ்நீரும் உவர்நீ ராகி
விழுந்திடல் காணமுன் விரைந்துவருக பொற்காலம்

இளந்தளிர்கண் விழுந்துளிகள் சமமா நதிகளாகிக்
களந்தனிலே கண்ணீரால் குளம்நிறைக்குமாம் அதிலே
எழுந்துபடர் ஆவிசெறிந் திருள்முகிலாகி மழைமனமுயாய்
விழும்மண்ணில் விதைமுளைத்துப் பயிர்வளர வருகபொற்காலம்

அளம்நாங்கள் ஏர்பூட்டி உழுகின்ற எங்கள்
தளம்தரைகள் தமிழரது புலமீதில் ஊன்றி
முளம்அளவி லேனுமுத் தமிழ்க்கொடி வளர்த்து
பழங்கள்தர வேபடர்ந்து பரந்துவருக பொற்காலம்

விடம்தமிழர் வீண்பழக்க வழக்க மின்றித்
தடம்புரளும் தனிஇனம் இருக்குந் தகுதிமிக்கோர்
படம்பார்த்துப் பைந்தமிழ் பயிர்வளரும் பாரினிலே
புடம்வேண்டாம் புரவிமீது எழுந்தோடி வருகபொற்காலம்

குடம்தனில் குடிநீராற் குடிகள் காக்கும்
கடமாகிக் கலைபேணி இசைமீட்டுச் சுதிகள்சேர
நடமாடும் நங்கையவள் நிழலாடக் கூடஒரு
இடமேது கண்ணேயிங் கினிதுவருக பொற்காலம்

மடங்கூடி மனசார உறவாட ஒவ்வா
முடமாக்கி மடக்கியிம் மாநிலத்தில் மழிச்சியுறத்
திடமேது திராணியற்றுத் தவள்வதென்னே தமிழ்மக்கள்
விடமருந்த விடாவிரைந்து வருகபொற் காலமிங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடமெழுந் தாடினால் சனமெங்கே ஓடலாம்
தடம்போடும் தாரீமீம் சாயும்தாய் மொழித்தேரின்
வடம்வலு வற்றிடுமோ வல்லின மேறிஓட
அடம்பிடித்தே அடியெடுத்து வருகபொற் காலமிங்கே

மனம்மாறும் மன்னர் மதிகுணம் மாறுஉம்
இனம்சரும் இனிஒன்றாய் வாழுமெனும் இது கனவோ
தினப்மாறித் தியவர்க்கிங் கிரையாகித் தேய்ந்துதேய்ந்து
தனம்தீருமோ தமிழர்க்குத் தழைந்து வருகபொற்காலம்

சனம்மாறிச் சினங்கொண்டால் சகல பேரும்
வனம்போக நேருமே வாழ்வையெண்ணார் மாநிலத்தில்
கனம்பேணாக் காலாட் படைசூழ்து கரைகாண்பார்
பனம்பொருள் படைக்க வருகபொற் காலமிங்கே

தரமான தமிழ்யாப்பைத் திறமாக்கிப் பாவோடி
அரம்தீட்டி அவையரி யாசனம் ஏற்றுவர்
சுரம்மாறிச் சுதி மீட்டார் ஓங்கு பனையாம்
மரம்கூடி மகிழ்ந்தாடும் மண்ணில்வருக பொற்காலமிங்கே

புரம்மீதினில் பெருங்கோ புரம்எழுப்ப வேயங்கு
சிரம்கோடி சிறிககள் விளையாட்டாய்ச் சேருமா
சரம்கோக்கச் செல்விசெவ் வந்திகளாய் மலருமா
நிரந்தரம் வாழநீ டுழிவருக பொற்காலமே

பரம்பொருள் நாடியே பாதமா மலைப்படியேறி
வரம்வேண்டி வீரவர லாறுபடைக்க மறவர்
சரம்கூப்பிக் காலமெல்லாம் நிற்பார் அன்னியர்க்கு
உரம்ஆகிடார் ஊர்வலம் வருகபொற் காலமே

திறம்பெற்ற திராவிடர் திளைத்த மேட்டில்
மறம்காத்த மானுடரே மறந்தமிழர் அன்றும்
அறம்செய் அரசோச்சி அமர்ந்திருந் தாரவரைப்
புறம்போக விடலாமோ புரமீது வருகபொற்காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறம்ஏது நேர்மைக்கு நீதிதர்மம் நிலைபெறத்
துறம்போற்றித் தூயகாவி போத்தித் துறந்தவரே
பறமமூட்டிப் பிள்ளைத் தமிழேற்றிப் பொன்விழாக்காண
உறங்காதிங் குள்ளாரை ஆசிதரவருக பொற்காலமே

நலம்வாழ நல்லினம் வாழநற் பண்புசேர்
புலம்போற்றி புராதன புறநானூறு போற்றிப்
பலம்போற்றிப் புதியதோ ருலகம் போற்றநல்
நிலம்போற்றி போற்றிநற் கருணைதர வருகபொற்காலம்

தேன்தமிழ் கொஞ்சும் தாய்த்திரு நாட்டில்
ஏன்தமிழ் பேசிட இடையூறுகள் தந்தாய்
யாம்தமிழ் யாப்பில் யாவையும் பெற்றோம்கொடும்
கோன்தமிழ் கொல்வதேன் காக்கவருக பொற்காலமே

வான்முகில் வளாதுபெய்க வையகம் வாழ்கவென்று
நான்உமைக் கேட்கலாமோ நாநிலம் ஆளவேண்டின்
கோன்முறை யரசுசெய்து குறைவிலா துயிர்கள்வாழ
மேன்மைகள் மனிதநீதி ஓங்கவே வருகபொற்காலம்

தாய் மொழி பேசநேசம் தாயகமே தீயில்வாசம்
வாய்மொழி வாழவேண்டி வானகம் வாழ்த்துக்கூறச்
சேய்மொழி பேசிடச் சேர்ந்துபல் கலைக்கழகம்
போய்மொழி பெயர்ந்திடல் தகுமோபிறந்து வருகபொற்காலம்

சாரணர் பயிற்சி சகலபா லரும்பெற்றிடக்
காரணர் யார்தானென்று கல்விஅமைச் சேகாண்பாய்
ஆரணர் அங்கேபே ரவைகூடி எங்கோபோயினர்
பூரணர் பூர்வீகர் வாழவே புரிந்துவ்ருக பொற்காலம்

தாரணி தமிழ்மண்ணைத் தாழ்த்திட எண்ணலாமோ
ஊரணி ஒன்றாய் ஒண்தமிழ் செபித்துநின்றால்
பேரணி வந்தெதிர்த்தும் பெறப்போவது ஏதுமில்லை
காரணி காட்டியே கண்விழித்து வருகபொற்காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கானகம் சென்றராமன் காட்டிய தர்மம்காணார்
வானகம் மீது 'புக்கார்' வந்துவிடும் குண்டுவீணாம்
தாயகம் தர்மபூமி தாக்கியேதிரும் திண்ணம்
ஏனகம் என்றேகுவாரோ எழுந்துவருக பொற்காலமே

இராவணன் வாழ்ந்தபதியா இலங்காபுரி? யாழ்தேசம்
இராணுவ வளர்ப்புக்காய் இராப்பகல் உழைப்போநாசம்
தோரண கோலம் தொடர்கின்ற துட்டயுத்தம்
காரணம் ஏதுசொல்வீர் கலிந்துவருக பொற்காலம்

வளர்முக நாடதனை வைத்துநீ வானூர்திபெற்றாய்
சுழல்வது சிறியலங்காவல்ல சுழல்துப்பாக்கி ரவைகள்தரம்
தளர்பவர் தமிழரல்லர் தன்மானம் பற்றியெண்ணார்
கிளர்வரோ கொடியழிவுகண்டு கிளர்ந்து வருகபொற்காலம்

ஒளிவளர் தேசம்இன்றேல் உலப்பிலாச் சேதம்ஆகும்
குழிஉள குண்டுபாயந்து குன்றிடாப் பள்ளத்தாகில்
வழிஉள வடிவமைத்த வாய்க்கால் நிலவறையில்
பழிசுமந்து பரலோகம்புக முன்புலர்ந்து வருகபொற்காலம்

அழிவினால் அஞ்ஞார் அஞ்ஞானம் பெற்றார்பின்
இழிவதும் நிழந்தால் ஒளிரவேனும் வாழாதார்
பழிகூறி அறியாதார் பகிர்ந்துண்பர் இரந்துண்ணார்
எழிதாயே இரங்கிநீ எழுந்து வருகபொற்காலம்

மொழிக்கொரு பழிநேர்ந்தால் முருகனுக் கேதுசொல்வர்
அழித்திடல் இயலாது அவைதூற்றிப் பழித்திடமுயலும்
இழிதகு எழியோரை ஒழித்திட நினையாது
வழித்திரு விழித்திடு விழித்தெழ வருகபொற்காலம்

களித்திடும் கலிமொழியைக் கழித்திட முடியாது
பழித்திட யாரும்பலவீ வந்தால்பொறுத்திட முடியாது
இழித்திட இயலாது கரைத்துக்குடித்திடவும் முடியாது
கொழித்திடக் குளித்திடக் குபீரெனவருக பொற்காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செழித்திரு செந்தமிழ்ச் சிற்பங்கள் செதுக்கிட
உளித்திரு உலகத்தமிழராய்ப் பிடித்திரு நிதர்சனம்
அளித்திரு அறிஞராய் தன்புநிலைக்க நினைப்பதும்
ஒளித்திரு ஒன்றமிழராய் ஒங்கிஉயர்ந்திட வருகபொற்காலம்

ஓடஓட ஒருவன் துரத்தினால் மடமைஒழினம்
நாடநாட ஒதுங்கினால் நாட்டிற்கே அவமானம்
குவியக்குனியக் குட்டவோ குட்டக்குட்டக் குனிவதோ
கூனியவோ நிமிரவோ குறைதீர்க்கவருக பொற்காலம்

குறைவிலும் நிறைவுறும் குறைவிலார் அடியார்கள்
இறைவனின் உயர்பணி இடைவிடார் குறைவிடார்
முறைபல அடியிலும் அழிவிலார் முறையிடாமிக்கார்
மறைவிலும் மிளிருவர் மலர்த்து வருகபொற்காலம்

அறையிலும் அடைபடார் அலையிலும் குறைவிடார்தமிழில்
கறையினைப் படவிடார் காங்கேசன் துறைவிடார்பல்
துறையிலும் பளிச்சிடத் தூயவர் பெயர்ச்சி
நிறையினில் வாடிலும் சிறந்துண்ண வருகபொற்காலம்

வல்லாளுமை வேண்டும் வடகிழபுலம் வாழவேண்டும்
கொல்லாமெமை ஆளவேண்டும் கொடுமைகள் ஒழியவேண்டும்
எல்லாமே ஈடேறி இல்லாமை அகலவேண்டும்
சொல்லாளுமை சமாதானம் சொரிந்து வருகபொற்காலமே

சபம்

பாராட்டுச் சான்றிதழ் பெற்ற கவிதை

எழுதியவர்:— சிவா சின்னத்தம்பி, கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகக் கவிதைத் தேர்வுப் பரிசில்களும் சிறப்புச் சான்றிதழ்களும் பெற்ற புலவர்கள்.

புலவர் சோம சிவப்பிரகாசம்

தமிழ்நாடு பசும்பொன் தேவர் மாவட்டத்தில் உள்ள கீழைச் சிவல்பட்டி இவரது ஊர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற் கற்று எம். ஏ., புலவர் ஆகிய சான்றிதழ்கள் பெற்றவர். தமிழ் இலக்கணம், இலக்கியம், கவிதை ஆகிய துறைகளில் வல்லவர். தமிழகக் கல்லூரிகளின் கவிதைத் தேர்வில் முதற்பரிசில் பெற்றவர். திருப்புத் தூர்த்தமிழ்ச் சங்கத் கவிதைத் தேர்வில் முதற்பரிசிலும் பொற்பதக்கமும் 'பொற்சிழிக்கவிஞர்' விருதும் பெற்றவர். குன்றக் குடி அடிகளார் 'கவிஞர்கோ' என்னும் விருதை இவருக்கு வழங் கினார். மதுரையில் நிகழ்ந்த உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டுக் கவிதைத் தேர்விற் பங்கு பற்றினார். கவிஞர் கண்ணதாசன் தலை மையில் 40 கவியரங்குகளிற் பங்குபற்றினார். 'வரும் நூற்றாண்டே வர்' என்னும் இவரது கவிதை நூல் ராஜா அண்ணாமலை மன்றத்தில் அரங்கேறியது. மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கும் சென் றுள்ளார். 300 கவியரங்குகளிலும் பட்டிமன்றங்களிலும் பங்கு பற்றினார். வயது 56 இச் சங்க உலகக்கவிதைத் தேர்வில் முதற் பரிசில் பெற்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்
கபிலவாணன்

இவரது வதிவிடம் சென்னை. பிறந்த ஊர் தஞ்சை மாவட்டம் ஏனாதிகரும்பை சென்னை இராயபுரம் தூய இராயப்பர் உயர்நிலைப் பள்ளிந் துணைத் தலைமை ஆசிரியர். இவரது இயற்பெயர் வீ. பெரியசாமி, கபிலவாணன் புனைபெயர்; கவிராஜயோகி என்பது சான்றோர் வழங்கிய விருதுப்பெயர். தமிழ், சமயம், கவிதை ஆகிய துறைகளில் வல்லவர். ஆன்மீகப் பணிகளில் ஈடுபாடு உள்ளவர். வெற்றிவேல் தமிழ்ப்பேராயம் என்னும் ஆன்மீக அமைப்பின் தலைவர். நூல் வெளியீட்டாளர். தமிழக அரசு 1992 ஆம் ஆண்டு 'பாவேந்தர் முதற்பரிசும் 1993 ஆம் ஆண்டு சிறந்த நூலாசிரியர் பரிசும் வழங்கியது. அகில இந்திய வானொலிக் கவிதை முதற்பரிசை இந்திய ஒலிபரப்புத்துறை அமைச்சர் வழங்கினார். உவமைக்கவிஞர், விருதும் முத்தமிழ் விருதும் பெற்றுள்ளார்; வானொலியிலும் தொலைக் காட்சியிலும் பல சொற் பொழிவுகளும் கவிதை களும் வழங்கியுள்ளார். பல இதழ்களிற் கட்டுரைகள் எழுதினார். 'காவியப்பாவை' என்னும் திங்கள் இதழை வெளியிட்டு வந்தார். இலக்கியம், கவிதை, ஆன்மீகம் ஆகிய துறைகளில் மாதந்தோறும் நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார் கவிதைத் தொகுதி, கவிதைப் பூங்கா, பழனி முருகன் பிள்ளைத்தமிழ், ஐந்திலக்கணம், தமிழ்க்கூடல், திருப்பேரூர் என்னும் நூல்களை வெளியிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் முருகதாசன்

இவரது இயற்பெயர் லயோ ஜனார்த்தனன். இவரது ஊர் தமிழ் நாடு திருவெண்ணெய் நல்லூர். பி. ஏ. பட்டதாரி. வயது 50. புதுச்சேரியில் ஆசிரியராகப் பணியாற்றுகிறார். சுத்தசன்மார்க்கப் பற்றுள்ளவர். 'இசைத்தேன்' என்னும் சிறுவர் பாடல் நூலை வெளியிட்டுள்ளார். இச் சங்க உலகக் கவிதைத் தேர்வில் 3 ஆம் பரிசில் பெற்றார்.

பரிசில் பெற்ற ஒருவரின் கருத்துரை

கொழும்புத் தமிழ்ச்சங்கம் ஒழுங்கு செய்த 'வருக பொற்காலம்' என்னும் உலகத் தமிழ் கவிதைத் தேர்வில் முதற்பரிசில் பெற்ற தமிழ்நாட்டுப் புலவர் வழங்கிய கருத்துரை :-

உலகத் தமிழர்களிலேயே நூண்மாண் நுழைபுலம் உள்ள தமிழறிஞர்கள் இலங்கையைச் சேர்ந்த ஈழத்தமிழர்களே அத்தகைய தமிழ்ச் சமுதாயத்தால் என்கவிதை முதற் பரிசுக்குரியதாகத் தேர்ந் தெடுக்கப்பெற்றது யான் செய்த பெரும்பேறே இப்பரிசு பெற்றதால் என் இலக்கியப்பணி புதுவாழ்வு பெற்றுள்ளது

புலவர் சோமசிவப்பிரகாசம்
கீழ்சிவல்பட்டி, தமிழ்நாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர் மெய்யாண்டவன்

இவா தமிழ்நாடு காரைக்குடி ஊரினர். தந்தை ஆறு மெய்யப் பன். தாய் சௌந்தரநாயகி அம்மாள். 27-3-1949 இவர் பிறந்த நாள். இவரது தாய்வழிப் பாட்டன் ஆண்டவன் சுவாமி; பெரும் புலவர்.

தொடக்கக் கல்வியைத் தம் ஊரில் கற்றார். உயர் கல்வியைத் திருவையாறு அரசர் கல்லூரியில் கற்றுப் புலவர் பட்டம் பெற்றார். தேவகோட்டை சமீன்தார் அரு. சோமநாராயணன் செட்டியாரின் தொடர்பு பெற்றுச் சமயக்கல்வி பயின்றவர்.

ஐந்தாம் வகுப்பில் திருப்பாவை ஒப்புதல் போட்டியிலும் பத்தாம் வகுப்பில் 'நால்வர் காட்டிய நன்னெறி' என்னும் சொற் பொழிவிலும் பரிசில்கள் பெற்றார். தந்தையாரிடம் இசைக் கல்வியையும் திருமுறையறிவையும் கற்றார். அரியக்குடி அரசு உயர் நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி வருகிறார். சென்னையில் இராமாயணத் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தியுள்ளார். பெரியார் நூற்றாண்டுக் கவிதைத் தேர்வில் இரண்டாம் பரிசிலும் பாரதிதாசன் கலை இலக்கியக் கவிதைப் போட்டியில் முதற் பரிசிலும் கண்ணதாசன் நற்பணி மன்ற இசைப் போட்டியில் இரண்டாம் பரிசிலும் பெற்றார்.

காரைக்குடி தமிழாசிரியர் சங்கத் தலைவராக இருக்கிறார். தமிழறிஞர் பலரின் வாழ்க்கை வரலாறுகளை எழுதிப் பாடநூல் ஆக்கியுள்ளார் தமிழ் எழுத்தாளர் சங்க உறுப்பினராக இருக்கிறார். பட்டி மன்றங்கள், கவியரங்குகள், சொற்பொழிவு அரங்குகள் ஆகியவற்றிற் பங்குபற்றி வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர்
ம. விக்ரர்

இவரது வதிவிடம் யாழ்ப்பாண நகர். பயிற்றப்பெற்ற தமிழ் ஆசிரியர். வயது 72. கவிதையில் நீண்டகால ஈடுபாடு உள்ளவர். சத்தியபாதுகாவலன், ஈழநாடு, சுதந்திரன், சமுகத் தொண்டன் ஆகிய இதழ்களில் இவரது கவிதைகள் வெளிவந்தன. வானொலிக் கவியரங்குகளில் பங்குபற்றியவர். இதயவீணை, சூசையப்பர் அம்மானை, யோசேவ்வாஸ் அம்மானை என்பன இவர் எழுதிய நூல்கள். யாழ். பேராயர் வ. தியாகுப்பிள்ளை அவர்கள் 'அமுதகவிப் புலவர்' என்னும் விருதினை வழங்கினார். இவரது புனைபெயர் யாழ்ஜெயம். ஈழத்துக் கவிமலர் நூலில் இவரது கவிதைகள் உள. பண்டிதமணி இளமுருகனார், சுத்தானந்தர் பாரதியார் ஆகியவர்கள் தலைமையில் கவியரங்குகளிற் பங்குபற்றினார் இத்தமிழ்ச்சங்க கவிதைத் தேர்வுகளில் முன்பும் பரிசில் பெற்றவர். அவுஸ்திரேலிய விக்ரோறியாத் தமிழ்ச்சங்கக் கவிதைத் தேர்விலும் பரிசில் பெற்றார். இவ் உலகக்கவிதைத் தேர்வில் திறமைச் சான்றிதழ் பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர்
ஏ. ஸீ. இஸ்மெயில்
லெப்பை

இவரது ஊர் மட்டக்களப்பு மாவட்டத்துச் சம்மாந்துறை. பயிற்றப்பெற்ற முதற்தரத் தமிழ் ஆசிரியர். கலைப்பட்டதாரி. கல்வி டிப்ளோமாத் தகைமை பெற்றவர். முதற்தர ஆசிரிய அதிபர் தொலைக்கல்விப் பயிற்சிச் சம்மாந்துறை நிலையப் பொறுப்பாளர். 34 ஆண்டுகள் ஆசிரியப்பணி செய்தவர். தமிழ், இலக்கியம், சித்திரம், சமூகக்கல்வி ஆகிய துறைகளில் வல்லவர். மாணவராக இருக்கும் போதே கவிதைகளை எழுதினார். நாடகங்களை எழுதி அரங்கேற்றியுள்ளார். பரிசில்களும், சான்றிதழ்களும் பெற்றுள்ளார். நல்ல அறிவும், அனுபவமும் உள்ளவர். இச்சங்கத்தின் உலகக் கவிதைத் தேர்வில் திறமைச் சான்றிதழ் பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் தமிழப்பன்

இவர் சென்னை அண்ணா நகரில் இருப்பவர். பிறந்த நாள் 05-11-1954 சென்னைப் பல்கலை கழகத்தில் எம். ஏ. புலவர் பி. எச்டி ஆகிய பட்டங்களையும் இந்தியப் பல்தமிழ்ப் பட்டப்பயிற்சியில் இளமணி, பெருமணி விருதுகளையும், ஆசிய நிறுவனத்தில் சுவடியியற் பயிற்சிச்சான்றிதழும், தமிழக அரசின் கல்வெட்டுச் சான்றிதழும், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் சுவடியியல் மொழிபெயர்ப்புப் பட்டங்களையும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி. எல். பட்டமும் பெற்றவர். தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மும்மொழியும் தேர்ச்சி உள்ளவர்.

நல்ல தமிழ் எழுத ஒரு நடை வண்டி, வேலை வாய்ப்புகளும் ஆயிரம் வழிகள், பொது அறிவு வழிகாட்டி என்னும் நூல்களையும் சங்க இலக்கியத்தின் மீன்வளம், கபிலபரணர் ஒப்பாய்வு, தனிப் பாடல்கள் உணர்த்தினும் இலக்கியக் கொள்கை திருக்குறளில் உயிர்க்குல ஒருமைப்பாடு, பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் இலக்கியக் கொள்கை, தமிழ் இலக்கியத்தில் இராமேசுவரம் ஆகிய ஆய்வுக் கட்டுரைகளையும், செந்துறைப் பூக்கள், சக்கரங்கள் சுழலட்டும், ஐந்திணைப் பூக்கள் ஆகிய கவிதை நூல்களையும் மணிமொழிப் பாட்டியல், மறைமலையடிகள் பிள்ளைத்தமிழ், குறளதிகாரம், எளிய முறையில் தமிழ் எழுத ஆகிய நூல்களை எழுதியுள்ளார்,

தமிழக அரசின் சிறந்த வரைவிற்கான பரிசு, பச்சையப்பன் கல்லூரிக் கட்டுரைப் பரிசு, எழுத்துலகக் கவிதை முதற்பரிசு, தமிழ்ப் பாவைச் சிறுகதைப் போட்டி முதற்பரிசு ஆகியவைகளைப் பெற்றுள்ளார்:

தமிழக அரசில் 25 ஆண்டுகளும், 12 ஆண்டுகள் பத்திரிகைப் பகுதி நேரப்பணியும், தமிழ்க்கல்லூரிகளில் புலவர் எம். ஏ. சுற்பிக்கும் பணியும் புரிந்துள்ளார். தமிழ் மாருதம், தமிழ்ப்பாவை, குறளியம் வள்ளுவர்வழி நாடு, தினமலர், கவிதை முதலிய இதழ்களில் இவர் கட்டுரைகள் எழுதியுள்ளார். உலகத் தமிழ் மொழி அறக்கட்டளை தமிழிசைவளர்ச்சித்திட்டம் ஆகியவற்றில் பொறுப்பு இயக்குநராக உள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்
க. த. ஞானப்பிரகாசம்

பிறந்த ஊர் நெடுந்தீவு - யாழ்ப்பாண மாவட்டம். வதிவிடம் அல்வாய். பயிற்சி பெற்ற முதற்தர ஆசிரிய அதிபர். தமிழ், இலக்கணம், இலக்கியம், சமயம், கவிதை ஆகிய துறைகளில் மிக வல்லவர். 20 ஆம் வயதில் கவிதைகள் எழுதத் தொடங்கினார். யா. ஆ. இ. பா. வி. சங்கம், யாழ். பல்கலைக்கழகம், கொழும்பு கிறிஸ்தவ பண்பாட்டுப் பேரவை, கொழும்பு தமிழ்ச்சங்கம், பிரான்சு பாரதி நூற்றாண்டுச்சபை, நோர்வே தமிழ்ச்சங்கம், அவுஸ்திரேலியா விக்ரோறியாத் தமிழ்ச்சங்கம், ஆகிய 17 தாபனங்களிற் கவிதைப் பரிசில்கள், பொற்பதக்கங்கள், சான்றிதழ்கள் பெற்றவர். பாரதி நூற்றாண்டிற் பாரதி பிள்ளைத்தமிழ் பாடிக் கொழும்பு தமிழ்ச் சங்க முதற்பரிசில் பெற்றார்.

இலங்கை அரசு, தமிழகப்பாரதி இலக்கியக்கழகம் ஆகியவை முறையே 'பொற்கிழிப்புலவர்' 'கவிமாமணி' என்னும் விருதுகளை வழங்கியுள்ளன. இலங்கைச் சுதந்திரவிழா, மாரதன், அஞ்சலோட்டம் என்னும் நூல்களின் ஆசிரியர் தமிழகத்தில் வெளிவந்த இன்றைய தமிழ்ப் புலவர் பாடல்கள் எனும் நூலிலும் இவர் பாடல்கள் உள. 50 ஆயிரத்துக்கு மேலான கவிதைகளைப் பாடியுள்ளார். யா. ஆ. இ. பா. வி சங்கப் பண்டிதத் தேர்விலும் சென்னை பல்கலைக்கழக வித்துவான் தேர்விலும் சித்தி பெற்றவர் விபுலானந்த அடிகள், புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை ஆகியவர்களிடம் கற்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர்
வி. இக்குவனம்

இவர் சிங்கப்பூரில் வசிப்பவர். மலேசியப் பல்கலைக்கழகத்தில் 20 ஆண்டுகள் நூலகராகப் பணியாற்றியவர். தமிழ்முரசு, தமிழ்மலர் என்னும் இதழ்களின் ஆசிரியராக இருந்தவர். வயது 71. கவிதைக் கனிகள், கவிதைக் கதம்பம், சித்திரப்பாக் கொத்து, வாரியார் சுவாமிகள் அந்தாதி என்பன இவரது நூல்கள். சிங்கப்பூர்த் தமிழ்க் கவிதை வளர்ச்சி என்னும் ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ளார். சித்திரப் பூங்கொத்து நூல் சென்னையில் இலம்புச் செல்வர் ம. பொ. சி, மாண்புமிகு நீதியரசர் மு. மு. இஸ்மெயில் ஆகியவர்கள் சிறப்புரைகளொடு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவா சின்னத்தம்பி

இவரது வதிவிடம் கனடாவில் உள்ள தொரன்றோ. இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்தவர். பிறந்த ஊர் வரணி. வயது 46. வணிகத்துறையில் தொழில் புரிபவர். இளமை முதல் கவிதைகள் பாடிப்பிறரின் பாராட்டுகளைப் பெற்றவர். பெரும்புலவர், ஈழத்துப் பூராடனார் 'கவிவளவன்' என்னும் விருதை இவருக்கு வழங்கினார். கவியரங்குகளிலும், வானொலியிலும் பங்குபற்றியுள்ளார். சிலம்பு சம்பு முதலியன இவரது புனைபெயர்கள். கட்டுரைகள், நாடகங்கள் என்பனவும் எழுதிப் பாராட்டுகள் பெற்றார். கனடாத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகப் பொருளாளராகப் பணிபுரிகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புத் தமிழ்ச் சங்கப் பதிப்பு நூல்கள்

1. வையா பாடல்
(தொடக்காலத் தமிழர் பற்றிய வரலாற்றுநூல்
கலாநிதி க. செ. நடராசா அவர்களின் ஆய்வுக் குறிப்புகளொடு)

2. நாம் தமிழர்
(தமிழறிஞர் பொ. சங்கரப்பிள்ளை எழுதிய வரலாற்று
ஆய்வு நூல்)

3. சங்கத்தமிழ்
(சங்கத்தின் 50 ஆண்டு நிறைவு வெளியீடு
ஆய்வுக் கட்டுரைகளும் சங்கம் பற்றிய குறிப்புகளும்)

4. மன்யோசு காதற் காட்சிகள்
(பண்டைய யப்பானிய தமிழ் இலக்கிய ஒப்பீடு
திருமதி. மனோன்மணி சண்முகதாஸ் எழுதியது)

5. பேராசிரியர் சு. வித்தியானந்தன் காட்டும்
(ஈழத்துத் தமிழர் சால்புக் கோலங்கள் பேராசிரியர்
ஆ. வேலுப்பிள்ளை)

6. தமிழ்மொழி-யப்பானிய மொழி இலக்கண ஒப்பீடு
(பேராசிரியர் அ. சண்முகதாஸ் திருமதி. மனோன்மணி
சண்முகதாஸ்)

7. பாவலர் சரித்திர தீபகம் !!
(ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை எழுதிய நூலுக்குப் பேராசிரியர்
பொ. பூலோகசிங்கம் அவர்கள் ஆராய்ச்சிக குறிப்புகள்
எழுதியுள்ளார்)

வத்தளை அச்சகம், 17/10, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
தொலைபேசி : 071-30560

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org